


New Doc 2020-01-25 11.24.59_page-0001.jpg




## அக்கறைப்பூக்கள்

மதிப்பிற்குரிய "எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு!

வணக்கத்துடன் த.அழகு எழுதும் மடல். "எரிமலை" இதழ் கேட்டு தங்களுக்கு கடிதம் அனுப்பினேன். கடிதம் கண்ட வுடன் தாங்கள் எனக்கு "எரி மலை" இதழ் ஜூன், ஜூலை, ஓகஸ்ட் ஆகிய மூன்று இதழ்கள் அனுப்பிவைத்தீர்கள். அனுப்பி வைத்ததற்கு மிக்க நன்றி. இனி அடுத்தடுத்து வரும் "எரிமலை" இதழ்களை எனக்கு அனுப்பி வைக்கும்படி மிக பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு
த.அழகு
இராசபாளையம்
தமிழ்நாடு

★★★

### தமிழே உலகை வெல்லும்

எரிமலையில் பணிபுரியும் அனைவருக்கும் என்றும் என் இதயங்கனிந்த இனிய நல்வாழ்த் துக்கள். நான் தங்கள் எரிமலை இதழ் கண்டு எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தேன். அதில் தம்பி வேலுப்பிள்ளை பிரபா கரன் படங்கள் பார்த்து புதிய தொரு உத்வேகம் அடைந்தேன். நான் தமிழ் தமிழர் இயக்கத்தின் உறுப்பினராகவும், தமிழீழ ஒருங் கிணைப்புக் குழு தீவிர ஆதர வாளராகவும் உள்ளேன். நான் கல்லூரியில் படித்துக் கொண்டு இருக்கும் போதும் இன்னும் பல இளைஞர்களை சந்தித்து தமிழ் உணர்வாளர்களாக மாற்றி வந்து கொண்டு இருக்கிறேன். தமிழ் தமிழர் இயக்கத்தின் மூலமாக பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு மேன்மேலும் புதிய எழுச்சியை பெற்றுக் கொண்டு இருக்கின்றோம். தமிழ் நாட்டில் சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும் இளை ஞர்கள் சீரழிந்து கொண்டு இருப்பதை தவிர்ப்பதற்கு ஒரே வழி அவர்களிடத்தில் தமிழ் உணர்வு என்ற விதையை விதைப் பதின் மூலமே நிறைவேறும் என்பதில் நான் திடமாக இருக்கின்றேன்.

குறிப்பு: எனது முகவரிக்கு தாங்கள் 1999 வருட நாட் காட்டி, ஒளிநாடா, ஒலிபேழை மற்றும் நூல்கள் போன்றவற்றை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தாய்மொழி தமிழுக்காக என் உயிரை அர்ப் பணிப்பு செய்ய என்றும் தயா ராக உள்ளேன். ஏன் என்றால் 'பிறப்பும் இறப்பும் ஒரு முறை தானே' நான் தங்களுக்கு என் னால் இயன்ற உதவிகளை செய்ய கடமைப்பட்டுள்ளேன். நன்றி என்றும் தொடரும்......

என்றும் அன்புடன்
கோ.கிருஷ்ணசாமி
சித்தாலம்புத்தூர்
தமிழ்நாடு

★★★

## பொங்கலென்ன பொங்கலடா!

உணர்ச்சிக் கவிஞர்
சிங்காரவேலன் திருச்சி

வெறிகொண்ட சிங்களவன்
வெட்டி வெட்டித் தமிழினத்தை
வீதியிலே குவிப்பதனைப் பாரடா! - வீர
வேங்கையெனத் தமிழ் மகனே பாயடா!

கண்ணகியின் தங்கையரைக்
கற்புநெறி மங்கையரைக்
கட்டிவைத்தும் கற்பழிக்கும் பாவி! - அவன்
கருவறுக்க அழைக்கின்றேன் கூவி!

ஆறுகோடித் தமிழ் மறவர்
ஆழ்கடலைத் தாண்டிவிட்டால்
நரிப்பிறவி சிங்களவன் தூளடா - ஈழ
வரிப்புலியே தூக்கிடுவாய் வாளடா!

பொங்கலென்ன பொங்கலடா
பொன் ஈழம் பொங்குதடா!
தைப்பிறப்பில் இல்லையடா களிப்பு - தனித்
தமிழ் ஈழம் பெறுவதொன்றே சிறப்பு!



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# உள்ளே...




சிறீலங்கா இராணுவ
எதிர்காலம்


பக்கம்– 04





தோல்வி நிட்சயம்

பக்கம்– 10


அண்ணா வாருங்கள்

பக்கம்– 14





சந்திரிகாவின்
பயண நோக்கம்
நிறைவேறவில்லை

பக்கம்– 18





சந்திரிகாவின் ஆட்சியில்
போர் விரிவடைந்தது பக்கம்– 28

- ★ யாழ். உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு இனக்கொலைகள் பக்கம் - 22
- ★ சமாதானத்தைப் பிறப்பிக்க ஒரு மகப்பேற்றுத்தாதி தேவை பக்கம் - 24
- ★ நியதிகளின் நிர்ப்பந்தம் பக்கம் - 30
- ★ பாதியில் முடிந்த பயணங்கள் - சிறுகதை பக்கம் - 32
- ★ புலம்பெயர் களமும் புகலிடத் தமிழர்களும் பக்கம் - 34
- ★ தாத்தா வருவார் - சிறுகதை பக்கம் - 38


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்பு உண்டு. ஒரு தேசிய நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத்தேசிய இனமுமே பகிர்ந்துகொள்ள வேண்டும். இந்தத் தேசியச் சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது நாம் எமது தேசத்திற்குப் புரியும் துரோகம் என்றே சொல்ல வேண்டும்.

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதினெட்டாம் ஆண்டு

ஜனவரி

1999

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*


# காத்திருப்போம்!

**பு**திய ஆண்டிற்கான திசையை எதிர்வுகூறுவதுபோல் சிறீலங்காவின் புதிய தரைப்படைத் தளபதியின் போர்ப் பிரகடனம் அமைந்துவிட்டது. தாம் ஆக்கிரமிக்கும் தமிழர் பிரதேசத்தில் ஒரு அங்குலத்தைத் தானும் தம்மால் விட்டுக்கொடுக்கமுடியாது என புதிய தளபதி சிறீலால் வீரசூரியா அறிவித்துவிட்டார். போரைத் தொடர்வதற்கான பேரினவாத நிகழ்ச்சித் திட்டத்தை வீரசூரியாவின் அறிவிப்பு உறுதிசெய்கிறது.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் முன்வைத்த மூன்றாந்தரப்பு மத்தியத்துவம் தொடர்பான கருத்துக்களுக்கு சர்வதேச சமூகம் கொடுத்த அவதானத்தால் ஆத்திரம்கொண்ட சிங்கள தலைமை தமது ஆக்கிரமிப்பு - இனஅழிப்பு திட்டத்தின் மூல உபாயமான இராணுவ வன்முறையை துரிதப்படுத்த முனைவதை சமகால இராணுவத் தலைமையின் அறிவிப்புக்களும் சிங்கள அரசின் துரித ஆயுதக் கொள்வனவுகளும் புலப்படுத்துகின்றன.

சந்திரிகா அரசு தன் இராணுவத் தீர்வுத் திட்டத்தின் மறுபக்கத்தில் போரற்ற முறையிலான சர்வதேச மத்தியத்துவத்துடனான தீர்வுத் திட்டத்தை நிராகரிக்க முயன்று வருகிறது. கடந்த வருடம் ஐ.நா. சபை தமிழ் - சிங்கள முரண்பாட்டை இணக்கத்திற்கு கொண்டுவர உழைக்கவேண்டுமென கேட்டுக்கொண்டது. தென்னாபிரிக்கா மீது தன் பேரினவாத இராஜதந்திரத்தை வலிந்து சிங்கள அரசு நடாத்தியது. இந்தியாவிற்கு பயணம் செய்து அங்கே தனது இராணுவத் திட்டத்திற்கு ஆதரவு திரட்ட முயன்ற சந்திரிகா எதுவித பகிரங்க ஆதரவுகளையும் பெறமுடியாத நிலையில் தனது மூன்றாந்தரப்பு எதிர்ப்பு நிலைக்கு இந்திய அங்கீகாரத்தை பெற முயன்றுவருகின்றார். இந்தியாவை காரணம் காட்டி மத்தியத்துவத்தை வலியுறுத்தும் ஐரோப்பிய - அமெரிக்க - அவுஸ்திரேலிய - ஆபிரிக்க நாடுகளையும், நிறுவனங்களையும் மிரட்டுவதே சந்திரிகா அரசின் தற்போதைய உத்தியாக அமைந்துவிட்டது.

விடுதலைப்புலிகள் சந்திரிகா அரசின் இராணுவத் திட்டங்கள் மீது கடந்த வருடம் நடாத்திய பாரிய எதிர் நடவடிக்கைகள் பேரினவாத இராணுவ நோக்கங்களை தேக்கமடைய வைத்து நீடிக்க வைத்துவிட்டது. பொருளாதார - அரசியல் இழப்புக்களையும் சமூக பண்பாட்டு சீரழிவுகளையும் எதிரியின் கட்டுமானம் மீது இத் தேக்க நிலை ஏற்பட்டுவிட்டது. இதனால் இவ்வாண்டு தொடர்ந்து நீடிக்கும் இராணுவ போரியல் திட்டங்கள் பலவீனமான இராணுவத்தின் மீது உயரிய சுமையை ஏற்றுவதாக அமைகின்றது. இது கொழும்பு இராணுவ ஆய்வாளர் ஒருவர் கடந்த வருடம் கூறியதுபோல் களைத்து - சீரழிந்த சிங்கள இராணுவத்தை விழுங்குவதற்கான நாட்களை பிரபாகரன் எதிர்பார்த்து காத்துள்ளார் என்ற ஊகத்தை நிரூபிக்கும் செயற்பாடாகும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## சிறீலங்கா

# இராணுவ எதிர்காலம்

## (1999-ன் இலக்குபற்றிய நோக்கு)

**சிங்களத்தின் சமூக - பண்பாட்டு வாழ்வில் ஜெயசிக்குறுவின் நீடிய காலமும் தோல்வி செய்திகளும் தாக்கம் ஏற்படுத்தின. போர் பற்றிய இறுமாப்பை தோல்வி கேள்விக்குறியாக்கியது. கிளிநொச்சி போன்ற சமர்களில் ஏற்பட்ட பாரிய உடற் சேதங்களே சிங்களக் கிராமங்கள் தோறும் தோல்வி பற்றிய பீதியை ஏற்படுத்தின**

இராணுவக் கட்டமைப்பில் சில மாற்றங்களுடனும் பாரிய ஆயுத தளபாடக் கொள்வனவுடனும் சிறீலங்கா அரசு 1999-ம் ஆண்டை "வரவேற்றுள்ளது. புதிய ஆண்டு பூராவும் சிங்கள அரசின் முழு நடவடிக்கைகளும் இராணுவ நிகழ்ச்சித் திட்டத்தை மூர்க்கமாக அமுல்படுத்தும் உட்கிடக்கையை கொண்டுள்ளது என்பதை இச் செயற்பாடுகள் உறுதிப்படுத்துகின்றது.

"ஜெயசிக்குறுய்" நடவடிக்கையின் தோல்வி சிங்கள இராணுவ இயந்திரத்தையும் அதன் உயர்மட்டத்தையும் பலப்படுத்தியிருந்தது. பாரிய படைக்குவிப்பின் மூலம் புலிகளை ஓரங்கட்டி அழிக்கலாம் என்ற "ரத்வத்தை" திட்டத்தை ஜெயசிக்குறுவின் தோல்வியானது கேள்விக்குறியாக்கியது. சிங்களத்தின் உச்ச பலம் குவிக்கப்பட்ட இராணுவ நிரையானது வன்னி நிலப்பரப்பை நீளப் பிளக்கும் திட்டத்தை அமுல்படுத்த முடியாது திக்குமுக்காடி புலிகளின் வலைக்குள் வீழ்ந்து கிடக்கின்றது என்ற பொது இராணுவ ஊகிப்பை உருவாக்கியுள்ளது.

இத் தோல்வியின் பிரதிபலிப்புக்கள் சிங்களத்தின் இராணுவ - அரசியல் - பொருளாதார சமூக வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தின. இராணுவ அமைப்பில் குறிப்பாக மரபு ரீதியாகப் போரிடும் ஆற்றலினை புலிகள் சிதைப்பார்கள் என்ற கருத்தை ஜெயசிக்குறுய் தோல்வி தோற்றுவித்தது. ஜெயசிக்குறுய் நடவடிக்கையின் வெற்றியை குறிவைத்து விடுக்கப்பட்ட சந்திரிகாவின் சுய அரசியல் கணக்கும் சிங்களப் பேரினவாதத்தின் அரசியல் கணிப்பீடும் தோல்வியினால் நிலைகுலைந்தது.

சரிந்து செல்லும் தமது பொருளாதார கட்டமைப்பை பாதுகாக்க ஜெயசிக்குறுவின் வெற்றி ஏற்படுத்தித் தரும் மனோவியல் உற்சாகத்தை சிங்கள அரசு எதிர்பார்த்திருந்தது. சாதாரண சிங்கள மக்களின் நாளாந்த பொருளாதார சுமையை போர்வெறி மூலம் சந்திரிகா அரசு திசைதிருப்பி வைத்திருந்தது. மறுபுறம் மிகப் பெருந்தொகை பணம் இராணுவ விஸ்தரிப்பிற்காக சந்திரிகா அரசினால் பாவிக்கப்பட்டுவந்தது. ஜெயசிக்குறுய் வெற்றி மூலம் புலிகளைப் பலவீனப்படுத்தி விட்டால் படிப்படியாக இராணுவ செலவீனத்தைக் கட்டுப்படுத்தலாம் என சிங்கள தேசம் கருதியது. சிங்கள நிதி, நீதி அமைச்சர் பீரிஸ் இதனைப் பகிரங்கமாக பலதடவை தெரிவித்திருந்தார்.

சிங்களத்தின் சமூக - பண்பாட்டு வாழ்வில் ஜெயசிக்குறுவின் நீடிய காலமும் தோல்வி செய்திகளும் தாக்கம் ஏற்படுத்தின. போர் பற்றிய இறுமாப்பை தோல்வி கேள்விக்குறியாக்



தமிழீழ ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

கியது. கிளிநொச்சி போன்ற சமர்க ளில் ஏற்பட்ட பாரிய உடற் சேதங் களே சிங்களக் கிராமங்கள் தோறும் தோல்வி பற்றிய பீதியை ஏற்படுத் தின. இராணுவத் தலைமை மீது நெருக்கடிகள் கருக்கொண்டது. காய முற்ற படைவீரர்களின் அமைப்பா னது போரை நிராகரித்து பகிரங்க மாக கருத்துக் கூறியமை இவ் "உடற் சேதாரம்" ஏற்படுத்திய அழுத்தமாகும்.

இந்தப் பாதிப்புக்களின் பின்ன ணியில்தான் இராணுவத் தளபதி யாக லெப்ரினன்ட் ஜெனரல் சிறீ லால் வீரசூரியா பதவியேற்றார். அவர் தனது முன்னுரிமைகளை பின்வருமாறு விளக்கினார்.

அ – ஆட்பலம்

ஆ – பயிற்சி (ஆட்பலம் பற்றாக் குறையை ஈடுசெய்தல்)

இ – படையினர் குடும்பங்களைப் பராமரித்தல்

தான் பதவியேற்ற ஆரம்ப நாட்க ளில் நடாத்தப்பட்ட பத்திரிகையா ளர் மாநாட்டில் மேற்கூறிய விடயங் களை அவர் தெளிவாக விளக்கி யிருந்தார். சிங்கள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இரா ணுவம் பலவீனமடைந்துள்ளது என பகிரங்கமாக பிரண்ட்லைன் (Front line) சஞ்சிகைக்கு அழித்த பேட்டி




யில் கூறினார். சிங்கள ஜனாதிபதி சந்திரிகா ஆட்பற்றாக்குறையையும் இராணுவத்தின் தப்பியோடும் தன்மை யையும் இதே சஞ்சிகைக்கான பேட்டி யில் ஒப்புக்கொண்டார். டெல்லியில் இடம்பெற்ற பொதுநலவாய நாடு கள் தொடர்பான நிறுவனமொன் றின் பாதுகாப்பு / பயங்கரவாதம் தொடர்பான மாநாட்டில் உரையாற் றிய சிங்களத்தின் முன்னாள் உளவுத் துறை உயர் அதிகாரி எட்வேட் குண வர்த்தனா இராணுவ மனோநிலை உடைக்கப்பட்டு வருவதை குறிப்பிட் டிருந்தார்.

புதிய இராணுவத் தளபதி டிசம் பர் மாதத்திலும் பின்னர் ஜனவரி யிலும் (99) இரு பொதுமன்னிப்புத் திட்டங்களை அறிவித்து தப்பியோ டிய இராணுவத்தை ஏதாவது ஒரு வழியில் போர்முனைக்கு அனுப்ப முயன்றமையானது ஆட்பற்றாக் குறையின் தீவிரத்தைப் புலப்படுத்து கின்றது.

இவ்வாண்டின் போர் தீர்க்கமாக அமையும் சாத்தியங்கள் இருப்பதால் ஆட்பல அதிகரிப்பு சிங்கள அரசின் முன்னுரிமை விடயமாகியது. வன்னி யில் சிதறுண்டு கிடக்கும் படை நிலைகளை மேலும் மேலும் பலப் படுத்த வேண்டிய தேவை அவசர அவசரமாக அரசுக்கு எழுந்துள்ளது. சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் ஆய்வாளர் ஒருவர் தனது கணிப் பீடொன்றில் A- 9 நெடுஞ்சாலையை படைகள் கைப்பற்றினால் அதனை வெறுமனே பாதுகாக்க மட்டும் 32 ஆயிரம் படையினர் தேவையென வரையறை செய்தார். எனினும் புலி களின் ஊடறுப்பு நடவடிக்கைகளை முறியடிக்க மேலும் பலமடங்கு படையினர் வன்னியில் தயார் நிலை யில் இருக்கவேண்டும் என வலியுறுத் தினார்.

யாழ் குடாநாட்டில் படை நிலை களின் மீது புலிகள் தொடுத்துள்ள சமர் தீவிரம் பெறின் பிடிக்கப்பட்ட இடங்களைவிட்டு வெறியேறவேண் டும் என்ற நிலைமையே பல இடங் களில் காணப்படுகிறது என்பதை பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர். மட்டக்களப்பில் சிங்களத் தின் பேர்பெற்ற தளபதி ஜனகப் பெரேரா அண்மையில் நடாத்திய இராணுவ நடவடிக்கை மீது புலிகள் தொடுத்த "அடியானது" தென்தமி ழீழத்திலிருந்து படையினரை மேலும் மீளப்பெற்றால் புலிகள் தென் தமிழீ ழத்தை முழுமையாக விடுவித்துவிடு வார்கள் என்ற நிலையை ஏற்படுத்தி யுள்ளது.

இந் நிலையில் சிங்கள இராணுவம் ஆட்பல பற்றாக்குறையின் சுமையை இவ்வருடம் சுமந்தே ஆகவேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இவ் நெருக் கடியை ஈடுசெய்ய பணியிலுள்ள படையினரை மேலும் பயிற்றுவித்து



**இன்றைய போரில் புலிகளின் போராற்றல் வீச்சுப்பெற்று இராணுவ நிலைகளை 24 மணிநேர சமர்களில் வீழ்த்தி விடும் ஆற்றலைப் பெற்றிருப்பதால் புலிகளின் மரபு ரீதியான படைநகர்வுகளை அழிப்பதற்கு ஏற்புடைய இராணுவ பொறிமுறைகளையே கையாள படைகள் முற்படுகின்றன. இன்று கனரக பீரங்கிகளும் எறிகணைகளும் வன்னிப் போரின் பொதுக் குறியீடாகியுள்ளது. எதிர்வரும் காலங்களின் எறிகணைகள் - பீரங்கிக் குண்டுகள் மூலமாக பிரதேசங்களை எரியூட்டி புலிகளுக்கும் - தமிழர்களுக்கும் தோல்வியை எற்படுத்தலாம் என்பதே புதிய ஆயுதக் கொள்வனவின் தன்மை வெளிப்படுத்தும் வடிவமாகும்**

ஒவ்வொரு படையினரையும் பத்துப் படையினருக்கு சமனாக மாற்றப் போவதாக சிறீலால் வீரசூரியா சமீபத்தில் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். இது குறுகிய நேரத்தில் சாத்தியமற்ற உபாயமாகும். கடுமையான போரில் ஈடுபட்டுள்ள துருப்பினரை மீளப் பயிற்றுவிப்பது போர்க் காலத்தில் சாத்தியமற்றது. இது வெறுமனே போர் முறையிலுள்ள தனது சகாக்களை ஊக்குவிக்க தளபதி முன்னெடுக்கும் ஆறுதல் வார்த்தைகள் எனலாம்.

எனினும் போரை நீடிப்பதானால் போரை தழுவி வாழும் ஒரு சமூக இருப்பை தோற்றுவிக்கும் பணியில் சிங்கள அரசு தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இராணுவ பொருளாதாரத்தில் செழுமைபெற்ற ஒரு வர்க்கம் உருவாகியுள்ளது. ஆயுத கொள்வனவு மோசடிகள் மூலம் இவ் வர்க்கம் செழிப்பதாக பல சிங்கள இராணுவ ஆய்வாளர்கள் கொதிப்பு தெரிவித்துள்ளனர். ஆனால் அரசு போர் சார்ந்து வாழும் ஒரு வர்க்கத்தை நிரந்தரமாக சிறீலங்காவில் தோற்றுவிக்க முயல்கிறது.

இராணுவ வீரர் – அவர்கள் குடும்பம் சார்ந்ததாக புதிய புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தும் சந்திரிகா அரசு, எதிர்வரும் மார்ச் மாதம் மாவட்டம் தோறும் விஸ்தரிக்கப்பட்ட ஒரு தனித்துவமான



அரச அமைப்பை இவ் நோக்கில் நிறுவ உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் இராணுவ மனோநிலையை உற்சாகப்படுத்தி போரிற்கான ஆட்பலத்தை பெறும் சூழ்நிலையை தோற்றுவிக்கலாம் என அரசு முற்படுகின்றது. இது மனிதாபிமான திட்டம் அல்ல. ஒரு இராணுவ பொறி எனலாம்.

இந் நிலைமைகளின் மத்தியில் சிங்கள அரசு அவதானிக்கத்தக்க ஆயுதக் கொள்வனவை மேற்கொண்டுள்ளது. சீனாவிடமிருந்து 2000 தொன் இராணுவ உபகரணங்களை கொழும்பில் தரையிறக்கியதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இவ் இராணுவத் தளபாடங்களில் பாரியளவிலான எறிகணைகளும் பீரங்கிக் குண்டுகளும் இருந்ததாக இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் கூறுகின்றார். இதனை ஊழல் என அவர் நிறுவ முற்பட்ட போதும் இது சிங்கள போர்த் தேவையின் பிரதிபலிப்பு என்றே ஆராயப்படவேண்டும்.


இன்றைய போரில் புலிகளின் போராற்றல் வீச்சுப்பெற்று இராணுவ நிலைகளை 24 மணிநேர சமர்களில் வீழ்த்திவிடும் ஆற்றலைப் பெற்றிருப்பதால் புலிகளின் மரபு ரீதியான படைநகர்வுகளை அழிப்பதற்கு ஏற்புடைய இராணுவ பொறி





முறைகளையே கையாள படைகள் முற்படுகின்றன. இன்று கனரக பீரங்கிகளும் எறிகணைகளும் வன்னிப் போரின் பொதுக் குறியீடாகியுள்ளது. எதிர்வரும் காலங்களின் எறிகணைகள் – பீரங்கிக் குண்டுகள் மூலமாக பிரதேசங்களை எரியூட்டி புலிகளுக்கும் – தமிழர்களுக்கும் தோல்வியை ஏற்படுத்தலாம் என்பதே புதிய ஆயுதக் கொள்வனவின் தன்மை வெளிப்படுத்தும் வடிவமாகும். புலிகள் முகாம்களின் முன்னரங்க நிலைகளை தகர்க்கின்றார்கள் என்ற செய்தி முகாமின் தலைமைக் கட்டளைப் பணியகத்திற்கு அனுப்பப்படின் சிங்கள பீரங்கிகள் சில கிலோ மீற்றர் தூரத்தை எரியூட்டும் உத்தரவுகளை பெறும் என இதனை ஒரு ஆய்வாளர் விபரிக்கின்றார். முன்னர் விமானப்படை இப் பணிகளை மேற்கொள்ள அழைக்கப்பட்ட போது புலிகளின் விமான எதிர்ப்புப் படையணிகளின் வீச்சு எதிரி விமானங்களை தடுத்து வந்தன.

தற்போது பிரித்தானியாவிடமிருந்து C-140 ஹெர்குல் ரக போக்குவரத்து விமானங்களையும் ரஷ்யாவிடமிருந்து MI-35 ரக யுத்த உலங்குவானூர்திகளையும் பெற சிங்களம் முயன்று வருகின்றது. கடல் மார்க்கமாக துருப்புக்களை விரைவாகக் காவும் M-10 ரக படகுகளை பிரித்தானியாவிடமிருந்து சிறீலங்கா பெற்றுள்ளது. இது 56 துருப்பினரை அல்லது இரண்டு சிறிய இராணுவ வாகனங்களையும் 20 துருப்பினரையும் துரிதமாக கடல் மூலமாக காவிச்செல்லும் Hover craft வகை படகுகள் ஆகும்.



ஆட்பலம் – இராணுவ தளபாட கொள்வனவுகளுடன் போர் உத்தி – கட்டளைமுறை– நோக்கு என்பன பற்றிய புதிய பார்வையை சிங்கள தலைமையகம் மேற்கொள்ள முயல்கிறது. ரத்வத்தையின் உத்திமுறை புலிகளினால் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து சந்திரிகா தொழில்சார் இராணுவத் தலைமை பற்றி பேசத் தொடங்கியுள்ளார். பல்வேறு முன்னாள் இராணுவ விமர்சகர்கள் இத் தொழில்சார் இராணுவத் தலைமை பற்றி பேசி வந்தனர். அரசியல் நிகழ்ச்சித் திட்டமற்ற பூரண இராணுவ நோக்கம் கொண்ட முறையொன்றால் மட்டுமே புலிகளைத் தோற்கடிக்கலாம் என இவர்கள் வலியுறுத்தி வந்தனர். ரத்வத்தை சிங்களப் பேரினவாதத்தினதும் தனது கட்சியினதும் அரசியல் நோக்கங்களை முன்னிறுத்தி தன்னை ஒரு இராணுவ – அரசியல் தலைமையாக நிறுவ முயன்றார். ஆனால் இராணுவத்தின் மீதான அவரது அழுத்தம் ஒரு எல்லைக்கு அப்பால் நீடித்தபோது இராணுவம் இதனை நிராகரிக்கத் தொடங்கியது. இவ் வெடிப்பை சீர்செய்வதற்காக ரத்வத்தையின் அரசியல் தலைமையான சந்திரிகா புதிய சமச்சீர் புள்ளியொன்றை உருவாக்க தொடங்கினார். இதனினுள் சிறீலால் வீரசூரியா தன் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள முயன்றார். ஓய்வு பெற்ற முன்னாள் தளபதி தளுவத்தையின் ஆதரவாளர் அவரது அதிகாரத்தையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ள முயன்றனர். ரத்வத்தை தனக்கொரு இடத்தை தேடினார். கடல் – விமானப்படைகளின் தளபதிகள் தமது இடங்களை நாடினர். இந்தக் குழப்பத்தின் மத்தியில் சந்திரிகா இராணுவ திட்டமிடல் – ஒருங்கிணைத்தல் – அமுல்படுத்தல் மேற்பார்வைக்கென ஒரு பிரத்தியேக அமைப்பை நிறுவி அதன் தலைவராக தளுவத்தையை நியமித்தார். JOB என அழைக்கப்படும் இப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



நடவடிக்கைகளில் இருக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.

முழு போர்முனைகளிலும் சிங்கள ஆட்பலம், ஆயுதபலம், கட்டுமானம் தொடர்பான பலம் – பலவீனங்கள் புலிகளினால் பரீட்சிக்கப்படும் போதுதான் வெளிப்படும். ஆயினும் சிங்கள இராணுவமானது தன் வீரியத்தின் எல்லைப்புள்ளியை



பணிமனையானது ஒரு சிவிலியன் அமைப்பு எனவும் இது தேசியப் பாதுகாப்புச் சபைக்கும் (NSC) சந்திரிகாவிற்கும் நேரடியாகக் கட்டுப்பட்டது எனவும் அறிவிக்கப்பட்டது. இப் புதிய அமைப்பை தனக்கான தலைமையகம் என ஏற்றுக்கொள்ள சிறீலால் வீரசூரியா மறுத்துவிட்டார். JOB – ன் பணிமனை திறப்பு வைபவத்திற்கு பின்னர் உடனடியாக பத்திரிகையாளர்களைச் சந்தித்து இவ் நிலைமையை இவர் தெளிவுபடுத்தினார். இதனைத் தொடர்ந்து புதிய JOB – ன் அதிகாரங்கள் தொடர்பான விவாதமும் குழப்பங்களும் நிலவின. ஆய்வாளர் அத்தாஸ் சிறீலால் வீரசூரியாவின் அறிவிப்பு JOB மீது வீழ்ந்த குண்டுகள் என விவரித்தார்.

இன்று சிறீலங்காவின் இராணுவ உட்கட்டுமானத்தில் ரத்வத்தையின் பங்கு – சந்திரிகாவின் பங்கு – தளுவத்தையின் பங்குகள் தொடர்பான விவாதம் சூடுபிடித்துள்ளது.

இதன் மத்தியில் வன்னியில் ஒரு இராணுவ நடவடிக்கையை துரிதப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதால் பேரினவாத இயந்திரம் இவ் இராணுவம் குழப்ப நிலையில் சில அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ள முயலும் என எதிர்பார்க்கலாம். ஓய்வுபெற்ற தளபதி தளுவத்தை – ரத்வத்தை என்போரின் பங்கை வெறுமனே வெளித்தோற்றத்திற்கான விடயமாகவே சிங்கள இயந்திரம் கையாளும். மாறாக தரைப்படைத் தளபதி குறுங்காலத்தில் துரிதப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை தலைமை தாங்குவார். இவ்வாறான போர்முனை நிலவரங்கள் சந்திரிகாவின் அரசியல் எதிர்காலத்துடன் பின்னிப்பிணைந்துள்ளதால் சந்திரிகாவின் தீவிரமான ஈடுபாடு இவ் இராணுவ நோக்கி தள்ளப்பட்டு வருவதையும் இதன் அடுத்த கட்டமாக முற்றுப்புள்ளியை நோக்கியே இதனை அரசியல் – பேரினவாத சக்தி இழுத்துச் செல்லும் என்பதனையும் பொது ஆய்வில் அறியமுடிகிறது.

– நாதன்

எந்தப் பலத்திலும் ஒரு பலவீனம் இருக்கும். அதனைத் தேடிக் கண்டுபிடித்து அதற்கேற்ற விதத்தில் துணிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்தான் எங்களுடைய வெற்றியே தங்கியிருக்கின்றது. அசுரபலம் கொண்ட "கோலியாத்" தை ஒரு சிறுவன் வெற்றிகொண்டது இவ் விதம்தான்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

New Doc 2020-01-25 11.24.59_page-0010.jpg

# அழிந்து போவது உறுதி

விடிவைத் தேடிய பறவைகளோ
விரைந்து சென்று பகையை
விரட்டிக் கலைத்து நிற்கும்.
தலைவன் காட்டிய வழியிலே
தளபதிகளின் தாக்குதல்களாலே
சிதறும் சிங்களமே.
அகிலம் சென்று
பொய் சொல்லிக் கைகுலுக்கி
கதிர்காமர்,
சீனத்து டாங்கியும்,
சிங்கப்பூர் டொங்கானும்,
சிம்பாவே குண்டும்
இஸ்ரேலின் கிபீரும்
உளவறிய தானியங்கி வண்டும் வாங்கி
அமெரிக்க கிறீன் பரேட் உதவி கொண்டு
நம் உயிர்களையும் உறவுகளையும்
ஊரின் செல்வங்களையும் அழிப்பாரோ - இனி?
இனவாத பூதங்களே
இங்கு நீங்கள் நினைப்பது நடக்காது.
வீரம் விளைந்த நிலமிது.
வீண் கனவு கொண்டு
விரைந்து வரும் பகையே!
விரைவில் தொலைந்து போவாயே.
அடங்காப் பற்றும் தமிழன்
ஆண்ட நிலங்களை ஆக்கிரமித்து
அரியாத்தை பிறந்த மண்ணிலே
பெரும் சாலை திறந்து
பெயரும் புகழுமாய் மாலைவாங்கி
தென்னிலத்தின் வீர மகனாய்
சிங்களத்தின் துட்டகெமுனுவாய்
வலம் வரும் ஆசையோ
ரத்வத்த உமக்கு?
வீரரின் ஈகத்தால் தமிழீழம்
விடுதலை பெறும்
தமிழினமே எழுக!
வெற்றி உறுதியென்று வந்தவர்
அழிந்து போவது உறுதி.



க. சங்கீதன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தோல்வி நிட்சயம்!

## புதிய இராணுவத் தளபதி அறிவிப்பு!!

கடந்த ஆண்டு தைமாதப் பிறப்பின்போது, சீன ஆயுதக் கொள்வனவுடனும் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி இராணுவ ரீதியான வெற்றிகளைக் குவிப்பது என்ற பிடிவாதத்தையும் சிறீலங்கா அரசு கொண்டிருந்தது.

ஆனால், நிலமை தலைகீழாக, விடுதலைப்புலிகளை ஒரு மரபுப் படையணியாக மாற்றிவிடும் பணியைப் புரிந்து, சிங்களப்படைக்கு பெரும் அழிவைக்கொடுத்தபடி, கடந்த ஆண்டு கடந்துசென்றுவிட்டது. புதிய ஆண்டு, அதாவது 1999 பிறந்த

கிளிநொச்சிப் பெருந்தோல்வியுடன், ஜெயசிக்குறுய் தோல்வியையும் சிறீலங்கா அரசு ஆண்டின் இறுதியில் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது








புதிய வருடம் பிறந்த சில நாளிலேயே, புதிய சூழுரைப்பை சந்திரிகா குமாரதுங்கா மேற்கொண்டுள்ளார். மிகவிரைவில் அரசபடையினர் யுத்தத்தை முடித்துவைப்பர் என, அவர் அறிவித்துள்ளார்.

போதும், சிறீலங்கா அரசு, பெரும் ஆயுதக் கொள்வனவை சீனாவில் இருந்து மேற்கொண்டுள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதம், பொலநறுவை றோயல் கல்லூரியில் வைபவம் ஒன்றில் பேசிய சந்திரிகா குமாரதுங்கா, இந்த வருடத்தின் இறுதியில் யுத்தத்தை முடித்துவைப்பேன் எனவும், அரசியல் தீர்வை வருட இறுதிக்குள் அமுலுக்கு கொண்டு வருவேன் எனவும் தெரிவித்திருந்தார். ஆனால், வருட இறுதியில் அவர், சீனாவிடம் இருந்து பெருந்தொகை ஆயுதக் கொள்வனவை மேற்கொள்ள ஆள் அனுப்பவேண்டியவராகவே இருந்தார் என்பதுடன், 99–ம் ஆண்டுக்கான யுத்தச் செலவீனங்களுக்காக பெருந்தொகை நிதியை முன்னைய ஆண்டுகளிலும் கூடுதலாக ஒதுக்கவேண்டிய கட்டாய சூழ்நிலையிலும் இருந்தார். அவரது பேச்சுக்கள் வெறும் வெற்றுப் பேச்சுக்கள் என்பதற்கு இது சிறந்த உதாரணமாகிவிட்டது.

ரத்வத்தையும் தன் பங்கிற்கு காலக் கெடுக்களையும், யுத்தம் பற்றிய பிழையான பரப்புரைகளையும் யதார்த்தத்திற்கு மிகப்புறம்பான தகவல்களையும் வெளியிட்டு கடந்த வருடம் முழுவதையும், சிங்கள மக்களின் அறியாமை மீது காலத்தை ஓட்டியுள்ளனர்.

ஜெயசிக்குறுய் முக்கியமான கட்டத்தில் இருப்பதாக பாசாங்கு செய்தே, காலத்தைக் கடத்திய சந்திரிகா — ரத்வத்தை கூட்டு அதிகாரம், இந்த வருடம் ஜெயசிக்குறுவை எங்கோ கைவிட்டுவிட்டது. அது இப்போது காணாமல்போன குழந்தையாகிவிட்டது. ஆனால் ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை முற்றுப்பெற்றுள்ளதாக சிறீலங்காவால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவேன் என சபதமிடப்பட்ட ஜெயசிக்குறுய் நிலவரம் என்பது பட்டவர்த்தனமாக வெளிப்பட்டு நிற்கின்றது.



கிளிநொச்சிப் பெருந்தோல்வியுடன், ஜெயசிக்குறுய் தோல்வியையும் சிறீலங்கா அரசு ஆண்டின் இறுதியில் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த அனுபவங்களில் இருந்து புதிய ஆரோக்கியமான நிலைப்பாட்டிற்கு சந்திரிகா அரசு இந்த வருடமாவது வரும் என்ற எதிர்பார்ப்பு எவரிடமும் காணப்படுவதாக இல்லை. புதிய வருடம் பிறந்த சில நாளிலேயே, புதிய சூழுரைப்பை சந்திரிகா குமாரதுங்கா மேற்கொண்டுள்ளார். மிகவிரைவில் அரசபடையினர் யுத்தத்தை முடித்துவைப்பர் என, அவர் அறிவித்துள்ளார். சந்திரிகாவினால்


**தமிழீழத் தேசியத் தலைவரின் சமாதான அறைகூவலை அலட்சியப்படுத்திவிட்டு, யுத்தத்தை திட்டமிட்டு நடத்த சந்திரிகா அரசு கூட்டுப்படை நடவடிக்கைப் பணியகம் ஒன்றை புதிதாக அமைத்திருப்பதானது, சந்திரிகா அரசு, தனது ஆட்சிக்காலம் முடியும்வரை அடிவாங்குவது என்றும், விடுதலைப்புலிகளையும் விடுதலைப் போராட்டத்தையும் முன்னோக்கி நகர்த்திவிடுவதெனவும் முடிவுசெய்திருப்பதாகவே தோன்றுகின்றது.**







ஜெயசிக்குறுய் முறியடிப்புத் தாக்குதலில் முக்கிய பங்கு வகித்தவிக்டர் டாங்கி எதிர்ப்பு படையணி



ஓரங்கட்டப்பட்டு வருகின்றபோதும், சந்திரிகாவின் சூழுரைப்பிற்கு ஆதரவாக பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையும் தன் பங்கிற்கு கருத்துக் கூறியுள்ளார். விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்தினால் மாத்திரமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என, தை முதல் வாரம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். கூடவே, இந்த ஆண்டில் சமாதானம் தோன்றும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தை சந்திரிகா தலைமை புதிய தோறணையில் எதிர்கொள்கின்றது. பிரச்சாரத்திலேனும் சமாதானத்திற்கு தலைமை தாங்கிய சந்திரிகா இந்த ஆண்டு யுத்தத்திற்கு நேரடியாக தலைமை ஏற்றுள்ளார். கடந்தகால இராணுவத் திட்டமிடல்கள், யுத்தம் நடத்தப்பட்ட முறைகள் யாவும் பிழையானவை எனக்கருதும் சந்திரிகா இராணுவ உயர்மட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றார் எனவும், இராணுவ நடவடிக்கைகளை நேரடியாக கண்காணிக்க அவர் தயாராகிவிட்டார் எனவும் கொழும்பில் இருந்து வெளி வரும் அரச ஆதரவு ஏடுகள் எழுதி வருகின்றன. அதாவது கடந்த காலத்து தோல்விகள் யாவற்றையும் முன்னையவர்களின் தலைமீது போட்டுவிட்டு, சந்திரிகாவை இராணுவ திட்டமிடலில் குதிக்கவைத்துள்ள வேலையை பத்திரிகைகள் மேற்கொண்டுவருகின்றன. உண்மையைக் கூறுவதானால், சிறீலங்காவின் படுமோசமான இராணுவத் தோல்விகளுக்கு கொழும்பில் இருந்து வெளி வரும் அரச ஆதரவு ஊதுகுழல் பத்திரிகைகளின் பெரும் பங்குண்டு. இராணுவ யதார்த்தம் புரியாமல் களநிலவரம் தெரியாமல், அங்கு முன்னேறினர், இங்கு முன்னேறினர் என்ற கட்டுக்கதைகளை எழுதி போலி மாயையை ஏற்படுத்தி, சிங்கள அரசிற்கு வெற்றிப் போதையூட்டிய பெரும் பொறுப்பு இப்பத்திரிகைகளையும் சாரும்.

இன்று, விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாக வளர்த்துவிட்டு, ஒரு மரபுப்படைக்குரிய பயிற்சியையும், இராணுவ வளங்களையும் கொடுத்துவிட்டு, ஜெயசிக்குறுய் தன் வாலைச் சுருட்டிக்கொண்டிருக்கின்றது. ஜெயசிக்குறுவின் ஆரம்ப ஆர்ப்பாட்டங்களுக்கும், ஆடித்தளர்ந்து நாடி ஒடுங்கிப்போய் பரிதாபகரமாய் நிற்கின்ற இன்றைய நிலைக்கும் இடையே, கொழும்புப் பத்திரிகைகளின் எகிறல்கள் எம்பிக்குதிப்புக்கள் எத்தனை எத்தனை என்பன சொல்லித்தெரிய வேண்டியதல்ல.

தமிழீழத் தேசியத் தலைவரின் சமாதான அறைகூவலை அலட்சியப்படுத்திவிட்டு, யுத்தத்தை திட்டமிட்டு நடத்த சந்திரிகா அரசு கூட்டுப்படை நடவடிக்கைப் பணியகம் ஒன்றை புதிதாக அமைத்திருப்பதானது, சந்திரிகா அரசு, தனது ஆட்சிக்காலம் முடியும்வரை அடிவாங்குவது என்றும், விடுதலைப்புலிகளையும் விடுதலைப்போராட்டத்தையும் முன்னோக்கி நகர்த்திவிடுவதெனவும் முடிவுசெய்திருப்பதாகவே தோன்றுகின்றது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா காலத்து

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



New Doc 2020-01-25 11.24.59_page-0014.jpg

கூட்டுப்படை நடவடிக்கை கட்டளைத் தலைமையகத்தை மீண்டும் புதுப்பித்து, ஓகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி உருவாக்கிய சந்திரிகா அடுத்த ஓரிரு மாதங்களிலேயே பாதுகாப்பு படை உயர் மட்டத்தில் ஏற்பட்ட பிணக்குகள் காரணமாக அதனைக் கைவிட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார். மீண்டும், கூட்டுப்படை நடவடிக்கைப் பணியகம் என்ற பெயரில், தைமாதம் புதிய அமைப் பொன்றை சந்திரிகா உருவாக்கியுள் ளார். ஏதோ, இனிமேல் யுத்தம் வெற்றிகரமாக நடத்தப்படும் என்ற மாயையை, சிங்கள இனவாதப் பத் திரிகைகள் ஏற்படுத்திவிடத்தவற

இராணுவத் தளபதியான றொகான் தளுவத்தை தற்போது, கூட்டுப்படை நடவடிக்கைப் பணியகத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னையவர் அப்போதும் பின்னயவர் இப்போதும் ஓரேவிதமான இன்னொரு கருத்தைத் தெரிவித்திருக் கின்றனர். அதாவது விடுதலைப்புலி களுடன் யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதாயின் இருபதினாயிரம் படையினர் உடனடியாக மேலதிகமாகத் தேவை என்று.

கடந்த வருடம், மார்ச் மாதத்தில் இருந்து ஓகஸ்ட் மாதம் வரைப்பட்ட ஐந்து மாதம் வரையான காலப்பகுதியில் சுமார் ஐயாயிரம் படையினர்.

**சிறீலங்காவின் படுமோசமான இராணுவத் தோல்விகளுக்கு கொழும்பில் இருந்து வெளிவரும் அரச ஆதரவு ஊதுகுழல் பத்திரிகைகளின் பெரும் பங்குண்டு. இராணுவ யதார்த்தம் புரியாமல் களநிலவரம் தெரியாமல், அங்கு முன்னேறினர், இங்கு முன்னேறினர் என்ற கட்டுக்கதைகளை எழுதி போலி மாயையை ஏற்படுத்தி, சிங்கள அரசிற்கு வெற்றிப் போதையூட்டிய பெரும் பொறுப்பு இப்பத்திரிகைகளையும் சாரும்.**

வில்லை. சந்திரிகாவின் தலைமையில் யாவும் வெற்றிகரமாக நடைபெறும் என்ற தோற்றப்பாட்டை ஏற் படுத்தும் முயற்சியில் மேற்படி பத் திரிகைகள் இறங்கியுள்ளதானது, சிறீ லங்கா அரசிற்கு மீண்டும் அடிவாங் கிக் கொடுக்க அவை கடுமையாக முயற்சிக்கின்றன என்றே கொள்ள வேண்டியுள்ளது.

புதிதாக இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றுள்ள சிறீலால் வீரசூரியாவும், விடுதலைப்புலிகளை அழித்து பலீனப்படுத்துவதற்கே முன்னுரிமை கொடுக்கப்போவதாகவும், விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்தி னாலேயே சமாதானத்தை ஏற்படுத்த முடியும் எனவும், இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றுக் கொண்ட பின்னரான தனது முதல் பேட்டியில் தெரிவித்திருந்தார். இதே கருத்துக்களையே ஓய்வுபெறும் இறுதிக்காலம் வரை தெரிவித்துவந்த முன்னைய

தலைமறைவாகியிருக்கின்றனர் என்ற நிலையில், தலைமறைவாகும் இராணுவத்தினரின் வீதம் ஜெற்வேகத்தில் எகிறும் நிலையில், இராணுவத் தளபதியின் இருபதினாயிரம் படையினரை திரட்டுவதென்ற திட்டம் குதிரைக்கொம்பே.

ஆக, புதிதாக பதவி ஏற்றுள்ள இராணுவத் தளபதியும், தமது எதிர் காலத்தோல்வியை முன்கூட்டியே எதிர்வுகூறிவிட்டார் என்றே இதன் மூலம் கொள்ளப்படவேண்டியுள்ளது.

இராணுவம் விடுதலைப்புலிகளிடம் பெறப்போகின்ற பெரும் தோல்விகளுக்கு தான் காரணமாகப் போவதில்லை என்றே நளுவல் செய்தியும், இந்த மேலதிக படையினர் வேண்டும் என்ற அறிவித்தலில் கலந்துமறைந்து கிடக்கின்றது.

- சுப்பு







கிட்டு பீரங்கிப் படையணி ஜெயசிக்குய் சமரில் மிக முக்கிய பங்கு வகித்தது




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



New Doc 2020-01-25 11.24.59_page-0015.jpg

# அண்ணா வாருங்கள்!



**ஆறு ஆண்டுகளுக்கு முன் வங்கக் கடலில் காற்றோடு - கடலோடு - மூச்சோடு கலந்த எங்கள் இனிய தளபதி கேணல் கிட்டண்ணாவினதும் 9 தோழர்களினதும் நினைவுகளை தமிழர் எதிர்காலம் பொக்கிசங்களாக பாதுகாக்கும்.**

## கிட்டண்ணா!

மானுட நேயம் வேர்விடும் மண் எங்கும் நிறைந்து நிற்பவர்; சுதந்திர தாகம் விழுதெறியும் பரப்பெல்லாம் கலந்து நிற்பவர்; நவீன தமிழர் வரலாற்றின் மூலவிசையாய் திகழும் பிரபாகரன் பாரம்பரியத்தின் மூத்த தளபதி.

★★★

லண்டன் விமான நிலையம்.

முன்னாள் சிறீலங்கா இராணுவத் தளபதி சேபால ஆட்டிக்கல இங்கிலாந்தில் சிறீலங்காத் தூதராக பதவி வகித்த காலகட்டம்.

எம் தலைவர் ஒருவரை வரவேற்க நாம் காத்து நின்றோம்.

பிரேமதாஸ அரசுடனான பேச்சுவார்த்தை இடம்பெற்ற காலகட்டத்தில் விடுதலைப்புலிகளின் அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளராக தலைவரால் நியமிக்கப்பட்ட கிட்டண்ணா வருகின்றார்!

எமக்குள் பிரமிப்பு. யாழ் குடாவை மீட்ட மூத்த தளபதியின் கைகளைப் பற்றி நடக்கப்போகின்றோம் என்ற மலைப்பு. பலமும் – தீட்சண்யமும் மிக்க மூத்த உறுப்பினர் ஒருவரை எமது தேசியத் தலைவர் அனைத்துலக நிர்வாகத்திற்கு பொறுப்பாக நியமித்தமை விடுதலைப்போரின் கனபரிமாண மெருகூட்டலுக்கு புது அர்த்தம் தந்தது.

பின்னாளில் கிட்டண்ணாவை லண்டன் பணிமனையில் சந்தித்த பிறிதொரு விடுதலை இயக்க ஸ்தாபகத் தலைவர் எமது தேசியத் தலைவரின் இம் முடிவு வரலாற்றுச் சிறப்புமிக்கது என மீண்டும் மீண்டும் பல்வேறு விடுதலைப் போராட்ட வரலாறுகளை ஆதாரம் காட்டி கூறியது நினைவுக்கு வருகிறது.

சேபால ஆட்டிக்கலவுக்கும் அவரது தலைவர் ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கும் பிறிதொரு கணிப்பு. கிட்டண்ணாவுக்கு கௌரவம் கொடுப்பதுபோல் கொடுத்து அவரது விடுதலை உணர்வை மழுங்கடித்துவிடலாம் என்ற எண்ணம். சிறீலங்காத் தூதரக அதிகாரிகள் கிட்டண்ணாவை [illegible]தப் பாவித்து விமான நிலையத்தின் பிறிதொரு வாசல் வழியாக அழைத்து வந்தனர்.

நேரடியாக எம்மிடம் வந்த கிட்டண்ணா அமைதியாக குசலம் விசாரித்தார். கண்களில் போராளித் தலைவனுக்கே உரிய தீட்சண்யம் காணப்பட்டது. ஒவ்வொருவரையும் நிதானமாகப் பார்த்தார். எமது உப அமைப்பொன்றின் பொறுப்பாளரிடம் கிட்டண்ணா உடனடியாக ஏதோ ஒரு விடயத்தைக் கேட்டார்.

"அண்ணே! ஓய்வெடுங்கள் விபரமாக சமர்ப்பிக்கிறேன். நீங்கள் களைத்துப்போய் இருப்பீர்கள்" என அவ் உப அமைப்பு பொறுப்பாளர் கூறியபோது "நான் விமானத்தில் இருந்துதான் பயணம் செய்தேன் ஒரு களைப்பும் இல்லை" என வேடிக்கையாகவும் கண்டிப்புடனும் கிட்டண்ணா பதில் கூறியபோது நாம் கால்களில் இறக்கை கட்டவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தோம்.

★★★

Tamileelam Archive

லண்டன் புறநகர் ஒன்றில் ஒரு பொதுக்கூட்டம். விடுதலைப்போரின் தேவைகள் – பரிமாணம் பற்றிய கருத்துக்களை இலகு தமிழில் தனக்கேயுரிய பாணியில் கிட்டண்ணா விளக்கமளித்துக்கொண்டிருந்தார். கூடியிருந்த லண்டன் தமிழர்கள் உன்னதமான விளக்க உரையை நிதானமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். கேள்வி நேரம் ஆரம்பமானது. அப்போது ஒரு "புத்திஜீவி" தமிழன் எமது தேசியத் தலைவர் பற்றி சந்தேகம் எழுப்பி எவ்வாறு அவரை தேர்தல்கள் இல்லாது தேசியத் தலைவராக கருதலாம் எனக் கேட்டார். கிட்டண்ணா ஆறுதலாகத் திரும்பக் கேட்டார் "யார் மகாத்மா காந்தியை தேசபிதா எனத் தேர்ந்தெடுத்தது?"

"புத்திஜீவி" இதற்கு என்ன பதில் சொன்னார் என்று எனக்கு ஞாபகமில்லை. கிட்டண்ணா அளித்த பதில் அங்கு குழுமியிருந்த தமிழர்களின் மனப்பரப்பெங்கும் உற்சாகத்தைத் தந்தது. தேசியத் தலைமையைத் தேர்ந்தெடுத்தது வரலாறுதான் என நாமே மனதுக்குள் குறித்துக் கொண்டோம்.

கிட்டண்ணா "பகிடி வதைக்கு" எதிராக யாழ் குடாநாட்டில் மேற்கொண்ட கடுமையான நடவடிக்கையினால் தண்டனைக்கு உள்ளான ஒரு முன்னாள் பல்கலைக்கழக மாணவன் "ஏன் நீங்கள் அப்படி நடந்தீர்கள்" என கடுமையான தொனியில் கேள்வி ஒன்றை முன்வைத்தான்.

> **"நாங்கள் எங்களது குடும்பத்தில் ஒருவர் பாதிக்கப்பட்டுவிட்டார் என போராட வரவில்லை. நான் அம்பாறையிலும், திருமலையிலும் தமிழர்கள் பாதிக்கப்படுகின்றனர் என வெதும்பியே ஆயுதம் தூக்கினேன்.**

லண்டன் பொதுமக்களுக்கான கூட்டம் ஒன்றில் கிட்டண்ணா கோபப்பட்டதை இதன்போதுதான் நான் கண்டேன்.

"நீ திரும்ப போய் மீள ஒருமுறை பகிடி வதையில் (றாகிங்) ஈடுபடு நான் உனக்கு திரும்பவும் இதுமாதிரித்தான் செய்வேன்"

லண்டன் போராளியைக் கண்டது!

பகிடிவதை என்ற பெயரில் இளம் மாணவர்கள் மீது நடாத்தப்படும் நாகரீகமற்ற கடுமையான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த சட்டங்கள் தேவையெனக் கூறி பல்வேறு சமூக அமைப்புக்களை வேண்டுகோள்களை முன்வைப்பதை அன்றைய முடிவோடு ஒப்பிட்டு நோக்கலாம்.

கோபமான கிட்டண்ணாவின் பதில் மண்டபத்தை அமைதிப்படுத்தியது.


"நாங்கள் எங்களது குடும்பத்தில் ஒருவர் பாதிக்கப்பட்டுவிட்டார் என போராட வரவில்லை. நான் அம்பாறையிலும், திருமலையிலும் தமிழர்கள் பாதிக்கப்படுகின்றனர் என வெதும்பியே ஆயுதம் தூக்கினேன். நீங்கள் பகிடி வதை என்ற பெயரில் ஒரு பல்கலைக்கழக புதுமுக மாணவியை சித்திரவதை செய்யும்போது கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்கமாட்டேன்". பதிலில் போராளித்துவம் கொடிகட்டிப் பறந்தது. நேர்மையை –மானுட நேயத்தை அந்த கோபத்தில் கூடியிருந்த அனைவரும் கண்டனர்.

★★★

பிரேமதாஸா அரசுடனான பேச்சுக்கள் முறிவடைந்துவிட்டன. கபட நாடகம் ஆடி தமிழர்களின் தேசிய விடுதலை இயக்கத்தையும் தலைமையையும் அழித்துவிட 'வாழைத் தோட்ட' தந்திர மூளை போட்ட திட்டத்தை உடைத்துவிடுமாறு எமது தேசியத் தலைவர் உத்தரவிட்டிருக்கிறார்.

பிரேமதாஸாவைப் பொறுத்த வரை அவரது திட்டம் முழுமை பெறுமுன் பிரபாகரன் முந்திவிட்டார் என்ற ஆதங்கம். எப்படியாவது போரை நிறுத்தி தன்னை பூரணப்படுத்திக் கொள்ள கால அவகாசம் தேவைப்பட்டது.

லண்டனில் உள்ள கொழும்புத் தூதுவர் சேபால ஆட்டிக்கல கிட்டண்ணாவை அவசர அவசரமாக தொலைபேசியில் தொடர்புகொண்



தனதாற்றல் மூலம் அனைத்து தரப்பு மக்களையும் ஒன்றிணைக்கும் கவர்ச்சியை கிட்டண்ணா கொண்டிருந்தார்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

டார்.

கிட்டண்ணா தனக்கே உரிய குழந்தை சிரிப்புடன் "ஒளித்துப் பிடித்து" விளையாடினார். கிட்டண்ணாவை வளைத்துப் பிடித்து – கதை சொல்லி அவரை எமது தேசியத் தலைவரிடமிருந்து பிரித்துவிடலாம் என்பதே பிரேமதாஸா – சேபால ஆட்டிக்கல கூட்டணியின் நோக்கம்.

சேபாலாவின் முயற்சிகள் தோற்ற பின்னர் பிரேமதாஸா நேரடியாகத் தொலைபேசியை நாடினார். எமக்கு அதிர்ச்சி. தொலைபேசியில் பிரேமதாஸாவா! கிட்டண்ணாவுடன் கதைக்க வேண்டுமாம்.

அதே சிரிப்பும் அதே முடிவும்.

'தலைவருடன் பேசிக்கொள்ளுங்கள்'

கிட்டண்ணா தெளிவாக இருந்தார். ஜனாதிபதியுடன் பேச மறுத்தார். எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக தன் மக்களையே விற்ற அமிர்தலிங்கத்தை இவ் இளைய – தூய – போராளித் தலைவனின் நினைவுகளுடன் நோக்கும் போது....

★★★

லண்டனில் தமிழ் "தலைவர்கள்" பலர் இருந்தனர். கொள்கை பேசும் வேகத்தில் சமரசத்திற்கான பாதைகளை அவர்கள் தயார்படுத்திக் கொண்டார்கள். லண்டனின் தேசிய நாளேடுகளும் – தொலைக்காட்சிகளும் –வானொலிகளும் தமிழீழப் போர் விடயங்கள் தொடர்பாக கருத்துக் கேட்கும் போது இவர்கள் தமக்குப் பட்டதைக் கூறுவர்.

கிட்டண்ணாவின் லண்டன் வருகை நிலைமையை தலைகீழாக்கியது. தலைமை என்பதன் அர்த்தத்தை புகலிடத் தமிழர்கள் புரிந்து கொண்டனர். தனதாற்றல் மூலம் அனைத்து தரப்பு மக்களையும் ஒன்றிணைக்கும் கவர்ச்சியை கிட்டண்ணா கொண்டிருந்தார். ஆனால் சில தமிழர்களை; கிட்டண்ணா அண்டவே விடவில்லை. ஒரு பிரபல ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர், சுயதம்பட்டம் அடிக்கும் ஆசிரியர் அவர். இன்று தமிழர் விடுதலைப் போரை குரோதமான கோணமூடாக பார்க்கும் இவரது வக்கிர மனது அனைவருக்கும் தெளிவாகத் தெரியும். அவர் கிட்டண்ணாவை சந்திக்க வந்திருந்தார். ஒருசில நிமிட நேர வார்த்தைகளே பரிமாறப்பட்டன. "கீழே இருங்கள் வருகிறேன்" என இரத்தினச் சுருக்கமாக கிட்டண்ணா பதிலளித்தார்.

ஆனால் கடைசிவரை அவரை கிட்டண்ணா சந்திக்கவில்லை. இது தீர்க்க தரிசனம் என பின்னாளில் உணர்ந்தேன். அவரைச் சந்திப்பதன் மூலம் அவருக்கு அங்கீகாரம் கொடுக்க அண்ணா தயாராக இருக்கவில்லை.

சமர் மீள ஆரம்பித்த வேளையில் லண்டனில் தேசிய பத்திரிகையாளர்கள் கிட்டண்ணாவை மொய்த்தனர். The Independent போன்ற பத்திரிகைகள் விரிவான பேட்டியை வெளியிட்டன.

நாம் குரலைப் பெற்றோம். தலைமையைப் பெற்றோம். பல்வேறு லண்டன் தமிழ் புத்தி ஜீவிகளுடனான சந்திப்பில் கிட்டண்ணா கூறிய வார்த்தைகள் தெளிவாக இருந்தது. "நீங்கள் உங்கள் கருத்துக்களைக் கூறுங்கள் ஆலோசனை தருவதை நிறுத்துங்கள்!"

கிட்டண்ணா தலைமை தொடர்பாக தெளிவாக இருந்தார்.

★★★

லண்டனுக்கு வந்த புதிதிலும் அதிகாலை நான்கு மணிக்கு அனைவரையும் எழும்புமாறு உத்தரவு.

டிசம்பர் குளிர்காலம்.

படிப்படியாக கிட்டண்ணா விட்டுக்கொடுத்தார். கிட்டண்ணாவினுள் வாழ்ந்த மனித மனம் மனித தேவைகளுடன் சமரசம் செய்யக் கூடியது.

எமக்கு மக்கள்தான் பலம் என்பதில் எதுவித கருத்துமுரண்பாடுகளும் அவரிடம் இல்லை.

தன்னைச் சந்திக்க வந்த பொதுமகன் ஒருவர் மது குடித்திருந்த காரணத்தால் அவரைத் திரும்ப அனுப்பிய எமது மூத்த உறுப்பினர் ஒருவர் கிட்டண்ணாவிடம் வாங்கிய பேச்சு சொல்லில் அடங்காதது.

வேலைப்பழு காரணமாக பணிமனைக்கு வந்த பகுதிநேர உறுப்பினருடன் சிரித்து முகம்கொடுத்து கதைக்க நான் மறந்துவிட்டதை அவதானித்து வைத்து அன்றிரவு என்னைப் பேசினார். தண்டித்துவிட்டார்.

தமிழ்நாட்டிலிருந்து ஒரு அரசியல் தலைவர் கிட்டண்ணாவைத் தேடி தொலைபேசி எடுத்திருந்தார். நள்ளிரவு நேரம். வழமையாக அவரது தொலைபேசியைக் கையாளும் நான் சற்று அசந்து தூங்கிவிட்டேன். சக நண்பன் ஒருவன் தொலைபேசியை எடுத்து கிட்டண்ணா தூங்குகின்றார் காலையில் பேசுங்கள் எனக்கூறிவிட்டான். அடுத்த நாள் வீட்டில் பிரளயமே நடந்தது. கிட்டண்ணா பார்த்த பார்வை ஆயுள் உள்ளவரை மறவாதது.

அந்தத் தமிழகத் தலைவருக்கு அப்படிச் சொன்னது பிழை; நாம் போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் எவ்வேளையும் பதில் சொல்ல வேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாக பதியவைத்தார்.

கிட்டண்ணா பணிமனைக்கு முதலில் வந்த காலங்களில் அமுல்படுத்தியது சுத்தப்படுத்தும் பணியையே. பணியக மலசலகூடத்திலிருந்து களஞ்சிய அறைவரை எல்லாம் துரிதமாக துப்பரவாக்கப்பட்டது.

கிட்டண்ணா வீட்டிலிருந்து பணியகத்திற்கு புறப்பட்டார் என நாங்கள் வீட்டிலிருந்து தொலைபேசியில் இரகசியமாக அறியப்பெற்றதுடன் பணிமனைக் கதவுகளை அகலத் திறந்து "மணங்களை" அகற்றி வாசனைப்பொருட்களைப் பரப்பி அசுத்த மணத்தை அகற்றிவிட்டு மலசல கூடத்தினை மீள ஒருமுறை துப்பரவு செயவோம்.

கிட்டண்ணாவை சுற்றி வாழ்ந்த நாங்கள் எல்லாம் காலப்போக்கில் இவ்வேலைகளை நேசித்தோம்.

இப்போது கிட்டண்ணா வரமாட்டாரா?

ஏங்குகின்றோம். நாங்கள் தயாராக உள்ளோம்.

எம் பணிமனைக் கதவுகளை திறந்துவைக்கின்றோம்.

அண்ணா! வாருங்கள்!

**இ.கோகுலன்**



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தமிழ் வெல்க!

**அண்மையில் திருச்சியில் நடைபெற்ற நாம் தமிழர் இயக்க கொடியேற்று விழாவில் மதுரை ஆதீனம் _ திருஞான _ சம்பந்த தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள் தமிழீழ விடுதலைக்கு ஆதரவு தெரிவித்து ஆற்றிய உரை.**

**தமிழீழம் கேட்பது.
மண்ணை ஆளஅல்ல.
தமிழன் மானத்தைக் காக்க.**

அ.எத்திராஜ்
தமிழ்நாடு

தமிழீழம் கேட்பது.
மண்ணை ஆளஅல்ல.
தமிழன் மானத்தைக் காக்க.
திருச்சியில் 'நாம் தமிழர் இயக்கம்' அதன் கொடியேற்று விழா, தொழில் அதிபர் வி.ஜி. செல்வராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 'நாம் தமிழர் இயக்க' பொதுச் செயலாளர் உணர்ச்சிக் கவிஞர் சிங்காரவேலன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மதுரை ஆதீனம் இரண்டாம் தமிழ்த் திருஞான சம்பந்தர் தமிழன் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார். அப்போது தமிழீழ விடுதலை குறித்து அவர் ஆற்றிய உரையாவது..

"இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழர்களே. இது வரலாற்று உண்மை"

தெரியாமை
புரியாமை
அறியாமை என்ற மூன்று ஆமைகளுக்குள் அடங்கிக் கிடப்போரே தமிழீழ மக்களை பிழைக்கச் சென்றவர்கள் என்றும் அவர்கள் தனிநாடு கேட்பது மடமை என்றும் கூறுகின்றனர். இலங்கைத் தீவை வளமாக்கியவன் தமிழன். இலங்கையில் றப்பர் தோட்டங்களையும் தேயிலைத் தோட்டங்களையும் காப்பித் தோட்டங்களையும் உருவாக்கியவன் தமிழன். அப்படிப்பட்ட தமிழனை இன்று அங்கு அடிமையாக்குகிறார்கள். உரிமை கேட்கும் தமிழனைச் சுட்டுக் கொல்லுகிறார்கள். தமிழன் துடித்து எழமாட்டானா? 1983–ல் திருச்சியில் நான் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும்போது உணர்ச்சிப் பிளம்பானேன். என்னுடைய பாதுகாப்புத் துப்பாக்கி எழுந்து நின்றது. அது பெரிய பிரச்சினையானதுமுண்டு.

எங்கள் துப்பாக்கிகள் – அக்கினி நாக்குகள்.
எங்கள் படைகள் – சூரியப் பிரளயம்.
எங்கள் குரல் முழங்குவது – தமிழினத்தின் உரிமைக்குரல்.

இன்றும் இலங்கையில் உயிர்ப்பலிகள் தொடர்கின்றன. தமிழர்களின் கோடிக்கணக்கான சொத்துக்கள் சூறையாடப்பட்டன. இதை நாம் அனுமதிக்கக் கூடாது. இலங்கைத் தீவிலுள்ள தமிழர்களின் உரிமைக்காக உலகத்திலுள்ள ஒவ்வொரு தமிழனும் குரல்கொடுக்க வேண்டும் அதற்கான தமிழின உணர்ச்சியை நாம் தமிழர் இயக்கம் எழுப்பிட வேண்டும். அதன் முயற்சிகளின் வெற்றிக்கு என்னுடைய ஆசிகள் என்றென்றும் உண்டு.

"கொட்டடா! முரசு எங்கே
கொம்பது எடுத்து ஊது
தட்டடா! கைகள், மறவர்
தலைவனைப் பாடு, ஈழம்
முட்டிய துயரம் யாவும்
முடிந்திடும், தமிழர் சேனை
எட்டிய வரையும் பாய்ந்து
எழுந்திடும், வெற்றி கண்டிடும்"

இவ்வாறு, மதுரை ஆதீனம் அவர்கள் பேசினார்கள்.

இக்கூட்டத்திற்கு ம.தி.மு.க சார்பில் டி.கே.தனபாக்கியம் அவர்களும் எம்.ஜி.ஆர் அ.தி.மு.க சார்பில் திரு.சந்திரன், திராவிடக் கழகத்தின் சார்பில் திரு. உண்மை கிருட்டிணன், சுதாகரன் நற்பணி மன்றத்தின் சார்பில் திரு.செல்லத்துரை, தமிழ் ஆன்றோர் பேரவையின் சார்பில் பேராசிரியர் வளன் அரசு, உலகத் தமிழ்க் கவிஞர் பேரவையின் சார்பில் பழனி இளங்கம்பன் ஆகியோரும் மற்றும் அனைத்துக் கட்சி பிரமுகர்களும் தமிழ் இயக்கங்களைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர். ■

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




New Doc 2020-01-25 11.24.59_page-0019.jpg

# சந்திரிகாவின் பயண நோக்கம் நிறைவேறவில்லை









**பழ.நெடுமாறன்**

இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் இலங்கை அதிபர் சந்திரிகாவும் அண்மையில் செய்துகொண்ட வணிக உடன்பாடு எதிர்காலத்தில் தென்னாசியப்பகுதியில் சுதந்திர வணிகப் பகுதி அமைவதற்கு வழிவகுக்கும் என்று கூறப்பட்டுள்ளது. ஏற்கனவே நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுடன் இந்தியாவுக்கு இத்தகைய வணிக உடன்பாடு உள்ளது. வங்காளதேசமும் இத்தகைய உடன்பாட்டைச் செய்துகொள்ள விரும்புகிறது. சார்க் நாடுகளின் கூட்டத்தில் தென்னாசியாவை சுதந்திர வணிகப் பகுதியாக அமைப்பது என ஏற்கனவே முடிவுசெய்துள்ளார்கள். அதற்கிணங்க இப்போது இந்திய – இலங்கை உடன்பாடு கையெழுத்தாகி இருக்கிறது.

பல விஷயங்களில் தன்னைச் சுற்றியுள்ள சிறு நாடுகளுக்குத் தாராளமான சலுகைகளை வழங்கி இத்தகைய உடன்பாடுகளை இந்தியா செய்து கொள்வதற்கு பல காரணங்கள் உண்டு. முதலாவதாக பாகிஸ்தானைத் தனிமைப்படுத்த இந்தியா விரும்புகிறது. இரண்டாவதாக இந்த நாடுகளை தனது வணிக சந்தைக்குரிய நாடுகளாக மாற்றிக்கொள்ள இந்தியா திட்டமிட்டுள்ளது.

> பொருளாதார ரீதியில் தனது நாட்டின் சந்தையை இந்தியப் பெரு முதலாளிகளுக்கும் தொழிலதிபர்களுக்கும் திறந்துவிடுவதின் மூலம் அவர்களைச் சரிக்கட்டி இந்திய அரசை அரசியல் ரீதியாக தன்வழிக்கு கொண்டுவருவதற்கு முயற்சி செய்யமுடியும் என சந்திரிகா நம்புகிறார்.

1997–ம் ஆண்டு புள்ளிவிபரப்படி இந்தியா இலங்கைக்கு 2348 கோடி ரூபாய் பெறுமான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. அதேகால கட்டத்தில் இலங்கை இந்தியாவுக்கு 185 கோடி பெறுமான பொருட்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

களை ஏற்றுமதி செய்திருக்கிறது. ஆக பெரிய அளவுக்கு வேறுபாடு உள்ளது. இந்தியாவுக்குச் சாதகமான உடன்பாடாக இது கருதப்படுகிறது. இந்த உடன்பாட்டின்படி இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு உரிய சுங்க வரியை மூன்று ஆண்டு காலத்தில் இந்தியா முழுமையாக நீக்கும். அதே வேளையில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குரிய சுங்க வரியை இலங்கை 8 ஆண்டு காலத்தில் நீக்கும்.

தொழில் நுணுக்கத்திலும் வணிக ரீதியிலும் வலிமை வாய்ந்த இந்தியப் பொருட்கள் இலங்கைச் சந்தையில் குவிக்கப்படும்போது இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களால் அதற்கு ஈடுகொடுக்க முடியுமா என்பது சந்தேகம். அப்படியிருந்தும் இந்த அரசியலில் பெரு முதலாளிகள் தொழிலதிபர்கள் ஆகியோரின் ஆதிக்கம் எந்த அளவுக்கு உண்டு என்பது அனைவருக்கும் தெரிந்ததே. எந்தக் கட்சி ஆட்சி செய்தாலும் இவர்களின் ஆதிக்கத்திற்கு எப்போதும் பங்கம் வருவதில்லை. பொருளாதார ரீதியில் தனது நாட்டின் சந்தையை இந்தியப் பெரு முதலாளிகளுக்கும் தொழிலதிபர்களுக்கும் திறந்துவிடுவதின் மூலம் அவர்களைச் சரிக்கட்டி இந்திய அரசை அரசியல் ரீதியாக தன்வழிக்கு கொண்டுவருவதற்கு முயற்சி செய்யமுடியும் என சந்திரிகா நம்புகிறார்.

இந்திய அரசியலில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சக்திகள் கை ஓங்கி இருப்பதாக இலங்கை கருதுகிறது. எனவே, இந்திய அரசைத் தன் வசப்படுத்துவதற்கான முயற்சியின் முதல் கட்டமாக வணிக உடன்பாட்டைச் சிங்கள அரசு செய்து கொண்டுள்ளது. ஆனால் இந்திய அரசு தரப்பில் இதற்குக் கடும் எதிர்ப்பு இல்லாமல் இல்லை. இந்திய வணிகத்துறைச் செயலாளர் பி.பி.பிரபு அதிகமான வணிக சலுகைகளை இலங்கைக்குக் காட்டுவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். சுதந்திர வணிகப் பகுதி ஏற்படுத்துவதின் மூலம் இந்தியாவின் சிறு தொழில் அதிபர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்று எச்சரித்துள்ளார். கேரளா, அசாம் போன்ற மாநிலங்களைச் சேர்ந்த தேயிலை, றப்பர் உற்பத்தியாளர்கள் இந்த உடன்பாட்டிற்கு கடுமையான எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். இலங்கையின் தேயிலை, றப்பர் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுமானால் உள்நாட்டில் இவற்றின் விலை வீழ்ச்சியடைந்துவிடும் என அவர்கள் அஞ்சுகிறார்கள்.



> தென்னாபிரிக்க இனவெறி அரசின் அட்டூழியங்களுக்கு கொஞ்சமும் குறைந்ததல்ல சிங்கள இனவெறி அரசின் அட்டூழியங்கள். சிங்கள அரசுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்க வற்புறுத்த வேண்டிய இந்திய அரசு இலங்கை அரசுடன் பொருளாதார உடன்பாடு கொள்வது என்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும் என தமிழ்நாடு கருதுகிறது

தென்னாபிரிக்காவில் வெள்ளை ஆட்சி இருந்தபோது அவ்வாட்சியின் நிறவெறிக் கொள்கைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐ.நா பேரவையில் தொடர்ந்து வலியுறுத்திய நாடு இந்தியாவாகும். இந்தியாவின் முயற்சியின் பேரில் தென்னாபிரிக்க அரசுக்கு எதிராக பொருளாதாரத் தடையை விதிக்கும் தீர்மானத்தை ஐ.நா நிறைவேற்றியது. தென்னாபிரிக்க இனவெறி அரசின் அட்டூழியங்களுக்கு கொஞ்சமும் குறைந்ததல்ல சிங்கள இனவெறி அரசின் அட்டூழியங்கள். சிங்கள அரசுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்க வற்புறுத்த வேண்டிய இந்திய அரசு இலங்கை அரசுடன் பொருளாதார உடன்பாடு கொள்வது என்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும் என தமிழ்நாடு கருதுகிறது.


இந்த உடன்பாட்டின் விளைவாக இந்தியா எதிர்பார்க்கும் ஆதாயங்களும் கிடைக்கப் போவதில்லை என்று பொருளாதார நிபுணர்கள் கருதுகிறார்கள். ஜப்பான், கொரியா போன்ற நாடுகளின் பொருட்கள் இலங்கைக்கு தாராளமாக விற்பனை செய்யப்படுகின்றன. இந்த நாடுகளின் பொருட்களை இலங்கை மூலமாக இந்தியச் சந்தையில் நுழைத்து இந்தியப் பொருட்களுக்கு கடும் போட்டியைத் தோற்றுவிக்கும் அபாயம் நிச்சயமாக உருவாகும்.

## அரசியல் நோக்கம்

இலங்கை அதிபர் சந்திரிகா இந்தியா வருவதற்கு முதல்நாள் மரபுக்கு மாறாக, இந்திய வெளியுறவுத்துறை மூத்த அதிகாரிகள் பின்வரும் கருத்தை வெளியிட்டனர். "இனப் பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்துவைக்க

இந்தியா விரும்பவில்லை. விரைவான வணிக உடன்பாடு செய்துகொள்வதில் மட்டுமே இந்திய அரசு ஆர்வமாக உள்ளது” என ஒரு அறிவிப்பு திடீர் என வெளியிடப்பட்டது. இது மரபுக்கும் வழக்கத்திற்கும் மாறானதாகும்.

கடந்த காலத்தில் காங்கிரஸ், ஐக்கிய முன்னணி ஆட்சிகள் இருந்தபோது புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த இந்தியா அந்நிலையைத் தொடர வேண்டும் என சந்திரிகா வற்புறுத்தக் கூடும் எனக் கருதிய இந்திய அரசு இத்தகைய அறிவிப்பை அவர் வருவதற்கு முதல்நாள் வெளியிட்டது. சந்திரிகா வருவதற்கு முன்னால் முன்னோடியாக இந்தியா வந்த வெளியுறவுத்துறை அமைச்சர் கதிர்காமர் இந்திய அரசின் முக்கிய மானவர்களையெல்லாம் சந்தித்து ஆதரவு திரட்டுவதற்கு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டார்.



ஜோர்ஜ் பெர்ணாண்டர்ஸ்

“இந்தியாவுக்குத் தெரிவிக்காமல் இனப்பிரச்சினையில் எத்தகைய தீர்வையும் நாங்கள் மேற்கொள்ளமாட்டோம்” என வாக்குறுதி கொடுத்தார். “அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நோர்வே, கனடா உட்பட 16 நாடுகள் இப்பிரச்சினையில் மத்தியஸ்தர்களாகச் செயல்பட முன்வந்த போதிலும் நாங்கள் அதை ஏற்கவில்லை. இந்தியாவை ஆலோசிக்காமல் எந்த முடிவையும் நாங்கள் மேற்கொள்ளமாட்டோம்” என்று கூறிப்பார்த்தார். பிரண்ட் லைன், இந்து போன்ற பத்திரிகைகளின் மூலம் தங்கள் கருத்துக்கு ஆதரவு திரட்ட இலங்கை அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டது. சந்திரிகாவின் வருகைக்கு இந்தப் பத்திரிகைகள் தேவைக்கு அதிகமான விளம்பரங்களை கொடுத்தன. வாஜ்பாயும் சந்திரிகாவும் 30 நிமிடங்களே பேசி வரலாறுகாணாத இந்த உடன்பாட்டைச் செய்துகொண்டுள்ளதாக இப்பத்திரிகைகள் பிரச்சாரம் செய்தன. எந்த இருநாடுகளின் அதிபர்களும் எத்தகைய உடன்பாடுகள் செய்துகொள்வதானாலும் முதலில் அதிகாரிகள் மட்டத்தில் பல முறை பேச்சு நடத்தி சுமூகமான முடிவுகள் மேற்கொண்ட பிறகே சம்பிரதாயமாக இரு நாட்டு அதிபர்களும் சந்தித்து உடன்பாட்டில் கையெழுத்திடுவார்கள். இந்த உண்மையை மறைத்து இந்தப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன.

அத்வானியை நேரில் சந்தித்துப் பேசி அவர் மனதை மாற்ற வேண்டும் என்று சந்திரிகா இட்ட திட்டம் நிறைவேறவில்லை. அத்வானி, ஜோர்ஜ் பெர்னாண்டர்ஸ் ஆகியோர் டெல்லியில் இருந்த போதிலும் அந்தச் சந்திப்பு நிகழவில்லை. ஒருநாள் முழுவதும் சந்திரிகா வீணாக காத்து இருந்ததுதான் மிச்சம்.



மற்றொரு முக்கியமான திட்டம் ஒன்றையும் சந்திரிகா வகுத்து இருந்தார். பாரதிய ஜனதாக் கட்சியின் இரும்பு மனிதர் என்று வர்ணிக்கப்பட்ட அத்வானி, புலிகளின் ஆதரவாளர் என்று கருதப்படும் ஜோர்ஜ் பெர்ணாண்டர்ஸ் ஆகியோரைச் சந்திப்பதற்கு அவர் முயற்சி செய்தார். இதற்காக தனது பயணத்தை ஒரு நாள் தள்ளியும் வைத்திருந்தார். இந்து போன்ற பத்திரிகைகள் அத்வானியை சந்திரிகா சந்திக்க இருப்பதாக பரபரப்புச் செய்திகளை வெளியிட்டன. ஆனால் இந்தச் சந்திப்பு நடைபெறவில்லை. பொதுவாக வெளிநாடுகளைச் சேர்ந்த அதிபர்கள் அல்லது பிரதமர்கள் இந்தியா வரும்போது இந்தியாவின் குடியரசுத் தலைவர், பிரதமர், வெளியுறவுத் துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்துப் பேசுவது வழக்கம். உள்துறை அமைச்சரை சந்திக்கிற பழக்கம் இல்லை. அதைப்போலவே பாதுகாப்புத்துறை சம்பந்தமான பிரச்சினை இருந்தால்தான் பாதுகாப்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

New Doc 2020-01-25 11.24.59_page-0022.jpg

புத்துறை அமைச்சரை சந்திப்பது வழக்கம் வழக்கத்திற்கு மாறாக மேற்கண்ட இருவரையும் சந்தித்துப் பேச சந்திரிகா விரும்பியதற்கு ஆழமான காரணங்கள் உண்டு. பாரதிய ஜனதா அரசு பதவியேற்ற பிறகு இந்தியாவுக்கு முதன்முறையாக வந்த கதிர்காமர் வாஜ்பாயைச் சந்தித்த போது, அவர் உள்துறை அமைச்சர் அத்வானியைச் சந்திக்கும்படி கூறிவிட்டார். அத்வானியைச் சந்தித்த கதிர்காமர் விடுதலைப்புலிகள் மீது அடுக்கடுக்காக புகார்களைக் கூறினார். ஆனால் அத்வானி அவரிடம் "விடுதலைப்புலிகள் பிரச்சினை இருக்கட்டும் உள்நாட்டில் 6 இலட்சம் தமிழர்கள் அகதிகளாக ஆகி இருக்கும் இடம், உணவு, மருந்து எதுவுமில்லாமல் பெரும் துன்பத்திற்கு ஆளாகி இருக்கின்றார்கள். அவர்கள் விஷயமாக நீங்கள் செய்தது என்ன" என்று நேருக்கு நேர் கேட்டதாகவும் அதன் விளைவாக கதிர்காமர் வாயடைத்துப் போனதாகவும் முன்பு செய்தி வெளியானது. எனவே, அத்வானியை நேரில் சந்தித்துப் பேசி அவர் மனதை மாற்ற வேண்டும் என்று சந்திரிகா இட்ட திட்டம் நிறைவேறவில்லை. அத்வானி, ஜோர்ஜ் பெர்னாண்டர்ஸ் ஆகியோர் டெல்லியில் இருந்த போதிலும் அந்தச் சந்திப்பு நிகழவில்லை. ஒருநாள் முழுவதும் சந்திரிகா வீணாக காத்து இருந்ததுதான் மிச்சம்.

## சோனியா சந்திப்பு

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை சந்திரிகா சந்தித்துப் பேசினார். ஐக்கிய முன்னணிக் கட்சி ஆட்சியில் இருந்தபோது டெல்லி வந்த சந்திரிகா அப்போது காங்கிரஸ் தலைவராக இருந்த பி.வி.நரசிம்மராவைச் சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ராஜீவ் பிரதமராக இருந்தபோது உள்துறை அமைச்சராக இருந்த நரசிம்மராவ் இந்திய அமைதிப்படை இலங்கைக்கு அனுப்பப்படுவதைக் கடுமையாக எதிர்த்தவர் என்பது மட்டுமல்ல, பிரதமராக இந்திரா இருந்த போது வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த நரசிம்மராவ் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவை நேரில் சந்தித்து தமிழர்களுக்கு எதிரான கலவரங்களை நிறுத்தும்படி கடுமையாக எச்சரித்தார். எனவேதான் அப்போது அவரை சந்திரிகா சந்திக்கவில்லை. கடந்த காலத்தில் சந்திரிகாவின் தாயார் சிறீமாவும் நேரு குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். நேரு, இந்திரா ஆகியோருடன் அவர் தாயார் வைத்திருந்த நல்லுறவைப் பயன்படுத்தி இப்போது சோனியாவுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள சந்திரிகா செய்த முயற்சி எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்திவிட்டது. இலங்கை

> அரசியல் நோக்கங்கள்தான் நிறைவேறவில்லை என்றாலும் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த இந்த வணிக உடன்பாடு உதவும் என்ற சந்திரிகாவின் நம்பிக்கையாவது நிறைவேறுமா? என்பதே கேள்விக் குறியாகிவிட்டது.

இனப்பிரச்சினை குறித்தோ அல்லது சந்திரிகாவிற்கு ஆதரவு தெரிவித்தோ வெளிப்படையாக எதுவும் கூற சோனியா முன்வரவில்லை. தனது கணவர் ராஜீவ் செய்த தவறை தானும் செய்ய சோனியா விரும்பவில்லை. அவர் வழக்கம்போல் மௌனம் சாதித்துவிட்டார். ஆனால் சோனியாவை சந்திரிகா சந்தித்தது கண்டு பா.ஜ.க.தலைமை அதிருப்தி அடைந்துள்ளது.

இந்து, பிரண்ட்லைன் போன்ற சில குறிப்பிட்ட பத்திரிகைகளைத் தவிர இந்திய தமிழகப் பத்திரிகைகள் எதுவும் சந்திரிகா வருகையைப் பெரிதுபடுத்தவில்லை. இந்திய அரசியல் கட்சிகளும் அவ்விதமே இருந்துவிட்டன.

ராஜீவ் பி.பி.நரசிம்மராவ் ஆகியோர் பிரதமர்களாக இருந்த போதும், பின்னர் காங்கிரஸ் தயவில் தேவகௌடா, ஐ.கே.குஜ்ரால் ஆகியோர் பிரதமர்களாக இருந்தபோதிலும் தங்குதடையற்ற இராணுவ, பொருளாதார உதவிகளைப் பெற்றதோடு வெற்றியும் பெற்றது சிங்கள அரசு. அதைப்போல இப்போதைய அரசையும் செய்ய வைக்கவேண்டும் என்றுதான் சந்திரிகா இந்தியா வந்தார்.

வணிக உடன்பாடு செய்வதற்கு இருநாடுகளைச் சேர்ந்த வணிக அமைச்சர்களே போதும். ஆனால், சந்திரிகாவே நேரில் வந்ததற்கு மேலே சொல்லப்பட்டவைதான் காரணமாகும். இந்த நோக்கம் நிறைவேறவில்லை.

சந்திரிகா வருவதற்கு சிலவாரங்களுக்கு முன்பாகவே இலங்கை எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கா டில்லி வந்து பிரதமர் உட்பட முக்கியமானவர்களைச் சந்தித்து இனப்பிரச்சினை தீராமல் இருப்பதற்கு சந்திரிகாவின் போக்கே காரணம் என்பதை விளக்கினார். அதன் எதிரொலியாகத்தான் சந்திரிகாவிற்கு செவிசாய்க்கும் நிலையில் டில்லி இல்லை என்று கூறப்படுகிறது.

அரசியல் நோக்கங்கள்தான் நிறைவேறவில்லை என்றாலும் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த இந்த வணிக உடன்பாடு உதவும் என்ற சந்திரிகாவின் நம்பிக்கையாவது நிறைவேறுமா? என்பதே கேள்விக் குறியாகிவிட்டது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# யாழ்ப்பாண உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு இனக்கொலைகளின் 25-வது ஆண்டு நினைவு




* சிறீமாவோ பண்டாரநாயக்கா நடத்திய இனப்படுகொலைகள் தமிழ் மக்களை ஆயுத எதிர்ப்புக்குத் தள்ளியது.
* தமிழரின் தாயக உரிமையை 72-ல் பறித்த சிறீலங்கா 74-ல் கலாச்சார உரிமையை மறுத்தது.
* சிங்கள அரசாங்கங்களின் தமிழின அழிப்பு என்பது யுத்தத்தினால் தோன்றிய எதிர்விளைவுகளல்ல.

யாழ்ப்பாண நன்னகர் விழாக்கோலம் பூண்டிருந்தது. 4—வது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிப் பேச்சைக் கேட்க மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது. "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று தமிழகத்தின் பேராசிரியர் நைனா முகம்மது அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் — தமிழ் மக்கள் மேல் சிறீலங்காப் பொலிசார் நடக்கத் தொடங்கினர். திரண்டிருந்த மக்கள் வெள்ளம் அங்கு என்ன நிகழ்கின்றது என திரும்பிப் பார்ப்பதற்கிடையில் துப்பாக்கி வேட்டுக்களின் தீர்வுச்சத்தம் மக்களை கிலி கொண்டு ஓட வைத்தது. பதறி ஓடும் மக்களை துப்பாக்கி அடிப்பாகத்தால் துரத்தித் துரத்தி அடித்தனர் சிங்களப் பொலிசார். எங்கும் தமிழ் ரத்தம் ஆறாகப் பீரிட்டு பாய்ந்தது. ஓடிய பெண்களின் ஆடைகளைப் பிடித்திழுத்து அவர்களை நிர்வாணமாக்கி தமிழ்த் தாய்க்குலத்தையே அவமானப்படுத்தி மகிழ்ந்தனர் சிறீலங்காப் பொலிஸ் படையினர். எங்கும் கூக்குரல் எங்கும் உதவிக் குரல்கள். இவற்றுக்கு நடுவே சிங்களச் சிப்பாய்களின் சின்னத்தனமான துப்பாக்கி வேட்டுக்குப் பலியாகி 80 தமிழ் உயிர்கள் மண்மீது உயிரற்று வீழ்ந்து கிடந்தனர். 11.101974—ல் சிறீலங்காவின் இன அழிப்பு வெறிக்கு இந்த 80 பேரும் பலியாகினர். இதற்கு முதல்நாள் சிறீலங்கா கலாச்சார ஊர்வலத்துக்கு அனுமதி மறுத்து உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்காது யாழ்ப்பாண மாநகரசபையைத் தடுத்ததினால் கலாச்சார ஊர்தி மின்சாரக் கம்பத்தில் முட்டி இரு தமிழ் உயிர்கள் [illegible] அடித்துச் செத்தன. ஆக மொத்த [illegible] 1972—ல் தமிழர்களது தாயக உரிமையை பறித்து சிங்கள பௌத்த குடியரசை அவர்கள் மேல் சட்ட விரோதமாகத் திணித்த சிறீலங்கா 1974—ல் தமிழர்களின் நில உரிமை (சிங்கள குடியேற்றங்கள்), மொழி உரிமை (சிங்களம் மட்டும் சட்டம்), தொழில் செய்யும் உரிமை (சிங்களம் படிக்கும்படி வற்புறுத்தல்), கல்வி உரிமை (1970–ம் ஆண்டின் தரப்படுத்தல் பல்கலைக்கழக அனுமதி மறுப்புச் சட்டங்கள்), அரசியல் ஜனநாயக உரிமைகள் (1972—ன் குடியரசு அறிவிப்பு) எல்லாவற்றையுமே பறித்த சிறீலங்கா 1974—ல் அவர்களது கலாச்சார உரிமைகளையும் மறுத்து கல்வி நோக்கில் மேற்கொள்ளப்பட்ட உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டை இனப்படுகொலைக் களமாக்கியது. இந்த 1974 தை 11–ம் திகதிய இனப்படுகொலைகள், 1972 முதல் தமிழீழத் தேசத்தை மீளமைக்க வேகமுடன் செயற்பட்டு வந்த தமிழ் இளைய சமுதாயத்திடை ஆயுத

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive





எதிர்ப்பின் தேவையை மேலும் வலுப்படுத்தியது. சிறீமாவோ பண்டாரநாயக்கா சிங்கள பௌத்த குடியரசை தமிழ் மக்கள் மேல் சட்டவிரோதமாக திணித்த நாள் முதல் சிறீலங்காப் பொலிசார் இராணுவத்தினர் போல் தமிழர் தாயகத்தில் செயற்பட்டனர். காரணமற்ற கைதுகள் விசாரணையற்ற படுகொலைகள் என்பன சிங்கள பொலிசாரின் சாதாரண செயற்திட்டங்களாக்கப்பட்டன. இனங்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தி தமிழரின் அரசியற் பணிவைப் பெறுதல் அரசியல் விழிப்புணர்ச்சி உற்றவர்களை கொன்று அழித்தல் அல்லது சிறைப்படுத்தி சித்திரவதை செய்து செயலற்றவர்களாக்குதல் எனும் இரு நோக்கமாக சிறீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சி பொலிசாரை இராணுவத்தினராக இயங்க வைத்து தமிழ் மக்களை வாட்டி வதைத்தது. இதனாலேயே 1972 முதல் ஆயுதப் போராட்டத்தின் மூலமே தமிழர்கள் உயிர்வாழலாம் என்ற தன்மை தமிழ் மக்களிடை வசப்பெற்றது. இந்த தேவையின் அவசியத்தை வலியுறுத்தும் வரலாற்றுச் சம்பவமாக 1974 தை 11–ம் திகதிய உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு இனப்படுகொலைகள் அமைந்தன.

தமிழீழத் தேசத்தை மீளமைப்பதன் மூலமே மக்கள் பாதுகாப்பான அமைதியை பெறலாம் என்ற உண்மையை உணர்த்தி தமிழீழ மக்களை 'மக்கள்' என்ற தனித்தன்மையை உணரவைத்து 'தேசிய இனம்' என்ற உணர்வுடன் "தமிழீழத் தேசிய விடுதலைப்போராட்டத்தை" முன்னெடுத்த வரலாற்றுச் சம்பவமாக இயங்கும் 1974 தை 11 யாழ்ப்பாண உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகள் நடந்து முடிந்து 25 ஆண்டுகள் முடிகின்றன. ஆனாலும் இன்னும் சிறீலங்கா அதே இன அழிப்பு வெறியுடன் அதே ஆயுதப் படை கொண்டு தமிழரை இன அழிப்பு செய்யும் அரசியற் செயற்திட்டத்துடன் தொடர்ந்து செயல்படுகிறது.

இந்நிலையில் இந்த உண்மைகளை உலகுக்கு எடுத்துரைத்து யுத்தத்தினால் சிறீலங்கா அரசாங்கம் தமிழர்களின் மேல் கட்டுப்பாடுகளை ஆயுத ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளவில்லை. தமிழர்கள் மேல் திட்டமிட்டமுறையில் மேற்கொள்ளப்பட்ட ஆயுத ஒடுக்குமுறைகளே தமிழர்களை ஆயுதமேந்தி போராடவைத்தது – வைக்கிறது என்பதனை நன்கு உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும். இதன் மூலம் தமிழீழத் தேசத்தை உலகுக்கு அங்கீகரிக்க வைத்தல் மூலமே உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு இனக் கொலைகளில் பலியான எம் உடன் பிறப்புக்களது உயிரிழப்புகளுக்கு சிறந்த அஞ்சலியை நாம் செலுத்தலாம்.

சூ.யோ.பற்றிமாகரன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



New Doc 2020-01-25 11.24.59_page-0025.jpg

# சமாதானத்தைப் பிறப்பிக்க
# ஒரு மகப்பேற்றுத் தாதி தேவை

POLITIKEN 02.01.1999

**டென்மார்க்கில் பிரபலமான பொலிற்றிக்கன் (POLITIKEN) பத்திரிகையின் நிருபர் நீல்ஸ் ஒல்ஸன் கொழும்பிலிருந்து....**

15 வருட உள்நாட்டுப் போரின் பின்பும் சிறீலங்காவின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு பலனளிப்பதாகத் தெரியவில்லை. இரு பக்கத்தார் மத்தியிலும் சந்தேகம் பெருமளவு நிலவுவதால், சமாதானப் பேச்சுவார்த்தை நிகழ்வதற்கு, ஒரு மூன்றாவது வெளிநாட்டின் உதவி அவசியமாக இருக்கின்றது.

ஒரு ஒடுக்கமான சாலை, தார் பூச்சு உடைந்த குழிகளில் புல் முளைத்துக் கிடக்கின்றது. சாலையின் இரு மருங்கிலும் அடர்த்தியான காடு மூடியிருப்பதனால் அவ் வீதியால் போனது ஒரு பச்சைக் குகையினூடாகப் போவது போலிருக்கின்றது. சாலையில் இரத்தக் கறைகளும் அதன் ஓரங்களில் குண்டடிபட்டுச் சிதைந்த வாகனங்களும் காணப்படுகின்றன. இராணுவத்தினரும் புரட்சிவாதிகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

இச் சாலையானது, வட சிறீலங்காவின் புரட்சி அமைப்பான தமிழ்ப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வன்னி மாகாணத்தின் ஊடாகச் செல்கின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட யாழ்ப்பாணத்துக்கு தமது ஆட்களையும், மற்றும் பொருட்களையும் கொண்டு செல்வதற்காக அரசாங்கம் பாரிய இராணுவ படையெடுப்பு மூலம் இந்த 75 கிலோ மீற்றர் சாலையைக் கைப்பற்ற முயற்சித்தது.

**ஒரு ஒடுக்கமான சாலை, தார் பூச்சு உடைந்த குழிகளில் புல்முளைத்துக் கிடக்கின்றது. சாலையின் இரு மருங்கிலும் அடர்த்தியான காடு மூடியிருப்பதனால் அவ் வீதியால் போனது ஒரு பச்சைக்குகையினுடாகப் போவது போலிருக்கின்றது.**

"வெற்றி நிச்சயம்" எனப் பெயரிடப்பட்ட இந்த முயற்சி ஆறாயிரம் இராணுவத்தினர் கொல்லப்பட்டும் இதற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தும், கோடிக்கணக்கான டொலர்கள் பெறுமதியான பொருட் சேதமும் கொண்ட ஒரு நடவடிக்கையாகவும் ஆகிவிட்டதனால், ஒன்றரை வருடகாலமாக நிகழ்ந்த இப்போரை இராணுவம் நிறுத்திக் கொண்டது. முப்பதினாயிரம் இராணுவத்தினர் இம்முயற்சியில் ஈடுபட்டபோதும் சாலையின் அரைவாசியையே புலிப்பிடியிலிருந்து பிய்த்தெடுக்க முடிந்தது.

## வெளிநாட்டு உதவி

இராணுவத் தோல்வியை அரசு ஒப்புக்கொள்ள மறுக்கின்றது. ஆனால் அதற்குப் பதிலாக, வடக்கில் புதிய உத்தியைக் கையாண்டு, ஒரு புதிய போர் முனையைத் திறப்பது பற்றியே அது பேசுகின்றது. சில குறுகிய பிரதேசங்களை தமிழ்ப் புலிகளிடமிருந்து கைப்பற்றுவதே இராணுவத்தின் தற்போதைய தனியான முயற்சியாக இருக்கின்றது.

சிறீலங்காவின் நாற்பது இலட்சம் தமிழர்களுக்கு ஒரு சுதந்திர தாயகத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே புலிகள் போராடுகின்றனர். தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்துக்களாவர். 150 இலட்சம் பௌத்த சிங்களப் பெரும்பான்மையினரால் தாம் இரண்டாந்தரப் பிரஜைகளாக இழிநிலைப் படுத்தப்படுவதாக இவர்கள் உணர்கின்றனர். 15 வருடங்க



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

New Doc 2020-01-25 11.24.59_page-0026.jpg

ளாக நிகழ்ந்துவரும் இந்த உள்நாட்டு யுத்தத்தில் 65.000–க்கும் அதிகமான உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. 200.000 தமிழர்கள் தீவைவிட்டு வெளியேறியுள்ளனர். 15 இலட்சம் தமிழர்கள் உள்நாட்டிலேயே அகதிகளாக முகாம்களில் வாழ்கின்றனர்.

இப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை தீர்வாக அமையாது. பேச்சுவார்த்தை மூலமாக மட்டுமே சமாதானத்தை அடையமுடியும், அதுவும், அரசு தமிழ்ப் புலிகளுடன் பேசுவதன் மூலமாகத்தான் சமாதானத்தை அடையமுடியும். ஆனால் 15 ஆண்டுகளாகத் தொடரும் இந்த உள்நாட்டு யுத்தத்தின் பின்னர், தமிழர்களும் சிங்களவர்களும் ஒருவருக்கு ஒருவர் அவநம்பிக்கை கொண்டவர்களாக இருப்பதனால் பேச்சுவார்த்தையை ஒழுங்கு செய்வதற்கு ஒரு மூன்றாவது அணி முன்வந்து உதவுவது அவசியமாகும் என்கின்றார் கொழும்பு பாராளுமன்றத்தின் மிதவாதக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆர்.சம்பந்தன் அவர்கள்.

## நோர்வேயின் ஆர்வம்

நோர்வேயின் வெளிநாட்டு தெரிவுக் குழுத் தலைவரான காக்கன் பிளாங்கபோ, மற்றும் நோர்வே பாராளுமன்ற அங்கத்தினரான எறிக் சோல்கெயிம் ஆகியோர் அண்மையில் அரசியல் சூழ்நிலையை ஆழம் பார்ப்பதற்காக கொழும்புக்கு வந்ததைக் காரணமாகக் காட்டும் திரு.சம்பந்தன், நோர்வே நாடு சமாதானத் தரகராகச் செயற்படுவதற்கான வாய்ப்பைக் குறிப்பிடுகின்றார். இவர், இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகிய வற்றையும் சமாதானப் பேச்சுவார்த்தையை நிகழச் செய்யக்கூடிய நாடுகளாகக் கருதுகின்றார். சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது பற்றி நம்பிக்கையுடன் பேசும் இந்தத் தமிழ் அரசியல்வாதியின் நம்பிக்கைக்குக் காரணம் என்னவெனில், உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இரு சாரருமே சமாதானப் பேச்சுவார்த்தையை யிட்டுப் பேசுவதானால் சிறீலங்காவின் முன்னைய அரசுத் தலைவர்கள் எவரும் செய்யாத அளவுக்கு தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சமாதான தீர்வை அடைவதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கின்றார். அத்துடன் தமிழ்ப் புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் மாவீரர் தினத்தில் நிகழ்த்திய தனது உரையில், நியாயமான அடிப்படையில் நிகழ்த்தவேண்டிய பேச்சுவார்த்தை பற்றியும், அது நடக்க வேண்டிய முறைபற்றியும் குறிப்பிட்டிருக்கின்றார்.

"நாங்கள் ஒரு தமிழ்க் கட்சிதான், ஆனால் நாம் எல்.ரி.ரி.ஈ–யுடன் பேசுவதில்லை. புலிகள் வேறு யாரும் செல்லமுடியாத பிரதேசத்தில் தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். 100 பொதுமக்களுக்கும் அதிகமாக மக்கள் கொல்லப்பட்ட கொழும்பு குண்டுவெடிப்புக்குப் பின்னர் அமெரிக்கா இவ் அமைப்பை சர்வதேச பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்திருக்கின்றது. ஆனால் எல்.ரி.ரி.ஈ–யை பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வருவது அத்தியாவசியமாகும். அவர்களுடைய பங்களிப்பு இன்றி சமாதானம் ஏற்படப்போவதில்லை என்றார் ஆர். சம்பந்தன்.

## சிறையிடலும் சித்திரவதையும்

கொழும்பிலுள்ள இன்போம் (INFORM) என்ற மனிதவுரிமை அமைப்பின் தலைவரான சுனிலா அபேசேகரா துரிதமான ஒரு தீர்வுக்கான தேவையை வலியுறுத்துகின்றார். கடந்த டிசம்பர் 10–ம் திகதி இவருக்கு நியூயோர்க்கில் ஐ.நா–வின் மனித உரிமைக்கான பரிசு செயலாளர் நாயகம் கோபி அனானினால் வழங்கப்பட்டது.

"கடந்த ஆண்டுகளில் சிறீலங்காவில் மனிதவுரிமைகள் மிகவும் இழிநிலைக்கு ஆளாகியுள்ளன. அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இச் சட்டப் பிரகாரம் அவர்கள் தமிழ்ப் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்ற சந்தேகத்தில் மாதக் கணக்கிலும் வருடக் கணக்கிலும் சிறையிடப்படலாம். இங்கு கொழும்பில் மட்டும் ஏறத்தாழ 700 தமிழர்கள் அரசியல் கைதிகளாக இருக்கின்றனர். இடையிடை உண்ணாவிரதம் இருப்பதன் மூலமாக, எவ்விதமான விளக்கமும் இன்றி ஒன்று அல்லது ஒன்றரை வருடத்துக்கும் அதிகமாகச் சிறையிடப்பட்ட இவர்களில் ஒரு சிலர் மட்டும் விடுவிக்கப்படுகின்றனர் என்கிறார் சுனிலா அபேசேகரா.

வடக்கில் யாழ்ப்பாணத்திலும், கிழக்கில் மட்டக்களப்பிலும் இப்போது தமிழர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமல் போகின்றனர் என இவர்

**இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் பயத்தின் காரணமாக சென்றுள்ளனர். அவர்கள் தமது உயிரைப் பணயம் வைத்தே இங்கிருந்து வெளியேறினர். அவர்கள் இங்கு திருப்பி அனுப்பப்படின், அவர்கள் சந்தேகத்துக்கு ஆளானவர்களாகி, கைதுசெய்யப்பட்டு மிரட்டப்படுவர். அவர்களது உயிருக்கு ஆபத்து ஏற்படுவதுடன், அவர்கள் வெறுப்பைகளுடனேயே மறுபடியும் வெளிநாடு செல்வதற்கு முதலிலிருந்து ஆரம்பிக்கவேண்டும்**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மேலும் தெரிவித்தார். மட்டக்களப்பில் சர்வதேச மன்னிப்புச்சபை தமிழர்கள் சித்திரவதை செய்யப்படுவதாகக் கூறப்படுவதை ஆராய்ந்து வருகின்றது. இவ்விரு இடங்களும் இராணுவத்துக்கும் தமிழ்ப்புலிகளுக்கும் இடையிலான யுத்தப் பிரதேசத்துக்கு மிகவும் அண்மையில் உள்ள பிரதேசமாகும்.

அதிகார பீடத்தினர் கொண்டிருக்கும் சந்தேகம் தீவிரமாக இருப்பதனால் சிறீலங்கா முழுவதுமே எல்லாத் தமிழர்களும் மிகத் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றனர். அவர்கள் எப்போதுமே எல்லா காவல் துறைக் கண்காணிப்பு இடங்களிலும் தமது அடையாள அட்டையைக் காண்பித்தல் வேண்டும். அடையாள அட்டையை வைத்திருக்காது விடின் இவர்கள் கைதுசெய்யப்படுவார்கள். ஆனால் இதே நிலையிலுள்ள ஒரு சிங்களவரைக் காவற்துறையினர் எச்சரித்து விட்டுவிடுவர். கொழும்பில் எல்லா அரச ஸ்தாபனங்களும் உண்டு. ஆனால் இங்கு தமிழர்கள் வாழ்வது கடினம். ஒருசிலர் மட்டுமே அவர்களுக்கு இருப்பிடங்களை வாடகைக்கு விடுவர். அத்துடன் இவர்கள் கொழும்பு வந்ததும் உள்ளூர் காவல் நிலையத்துக்குச் சென்று பதிவுசெய்து கொள்ள வேண்டும். தமிழர்களினால் தமது சொந்த நாட்டிலேயே சுதந்திரமாக நடமாடமுடியாது.

தமிழர்கள் மிகவும் பாரபட்சமான முறையில் இங்கு நடத்தப்படுகின்றனர். கடந்த வருடம் ஒரு சிங்கள இராணுவச் சிப்பாய் வடக்கே யாழ்ப்பாணத்தில், *400* தமிழ்ப்பொது மக்களின் சடலங்கள் புதைக்கப்பட்ட ஒரு பெரும் புதைகுழி பற்றிக் கூறியிருந்தார். அரசின் மனிதவுரிமைக்கான ஆணைக்குழு இவ் விடயத்தைக் கவனத்துக்கு எடுத்திருத்தல் வேண்டும். ஆனால் இப்புதைகுழி இன்னமும் ஆராயப்படவில்லை. தாமதம் செய்யப்படும் இந்தக் காலத்தில் அந்தச் சடலங்கள் வேறு இடத்துக்கு மாற்றப்படலாம். அத்துடன் பருவமழை காரணமாக அந்த இடம் வெள்ளத்தினால் மூடப்பட்டுள்ளது என்கின்றார் சுனிலா அபேசேகரா.

இவருடைய சந்தேகத்துக்கு இடமில்லாத மதிப்பீடு என்னவெனில், சிறீலங்காவில் தமிழராக இருப்பது ஓர் பாதுகாப்பான விஷயமல்ல என்பதுதான். எனவே, டென்மார்க்கில் இருந்தோ அல்லது வேறு நாடுகளிலிருந்தோ அகதி விண்ணப்பதாரிகளான தமிழர்களை திருப்பி அனுப்புவதும் அவர்களுக்குப் பாதுகாப்பான செயல் அல்ல.

“அவர்கள் எப்போதும் கைது செய்யப்படும் ஆபத்து உண்டு. அத்துடன், இங்கு அவர்களுக்கு உறவினர் இல்லாதுவிடின், தங்குவதற்கு இடம் எடுப்பதோ அல்லது ஒரு வேலையைத் தேடிக்கொள்வதோ மிகவும் கடினமான காரியம்” என்கின்றார் சுனிலா அபேசேகரா.

இதே செய்தியை அவர், டென்மார்க் அமைச்சிலிருந்தும், டென்

**சிங்கள அரசு, பாதுகாப்பு அமைச்சின் 1999-ம் ஆண்டுச் செலவுக்கு இதுவரை இல்லாத பெருந்தொகையான 5 கோடி குறோணர்களை (50 கோடி ரூபாய்கள்) ஒதுக்கியுள்ளது.**

மார்க் அகதிகள் நலன்புரி சங்கத்திலிருந்தும் சிறீலங்காவுக்குச் சென்ற இரு குழுக்களுக்கும் கூறியுள்ளார். தமிழ் அரசியல்வாதியான ஆர்.சம்பந்தனும் இவர் சொல்வதை ஆமோதிக்கின்றார்.

“அவர்கள் எல்லா இடமும் சந்தேகிக்கப்படுவதனால் அவர்களால் இங்கு திரும்பி வரமுடியாது. உதாரணமாக ஜேர்மனியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட *16* தமிழர்கள் கொழும்புக்கு வடக்கே உள்ளதொரு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களது சொந்த இடம் யுத்தப் பிரதேசமாகவோ அல்லது எல்.ரி.ரி.ஈ–ன் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசமாகவோ இருப்பின், அவர்களால் அங்கு திரும்பிச் செல்ல முடியாது. அவர்களது கிராமங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. அவர்களைத் திருப்பி அனுப்புவதைப் பார்க்கிலும் சமாதானத்தை அடைய எமக்கு உதவுங்கள். அப்போது நிச்சயம் தமிழர்கள் நாட்டுக்குத் திரும்புவார்கள்” என்கிறார் சம்பந்தன்.

யுத்தத்தின் பிடியில் அகப்பட்டுள்ள வடகிழக்கு சிறீலங்காவிலுள்ள திருகோணமலையில் உள்ள அமைப்பொன்றின் தலைவர் பொலிற்றிக்கன் பத்திரிகைக்குப் பின்வருமாறு கூறுகின்றார். “இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் பயத்தின் காரணமாக சென்றுள்ளனர். அவர்கள் தமது உயிரைப் பணயம் வைத்தே இங்கிருந்து வெளியேறினர். அவர்கள் இங்கு திருப்பி அனுப்பப்படின், அவர்கள் சந்தேகத்துக்கு ஆளானவர்களாகி, கைதுசெய்யப்பட்டு மிரட்டப்படுவர். அவர்களது உயிருக்கு ஆபத்து ஏற்படுவதுடன், அவர்கள் வெற்றுப் பைகளுடனேயே மறுபடியும் வெளிநாடு செல்வதற்கு முதலிலிருந்து ஆரம்பிக்கவேண்டும்.

## குண்டு மழையில் அமைச்சர்

தற்போது யுத்தம் குறைந்த சுருதியில் தொடர்கின்றது. கைவிடப்பட்ட ‘வெற்றி நிச்சயம்’ என்ற நடவடிக்கை எத்தனை ஆயிரம் மனிதவுயிர்களைப் பலியெடுத்தது என்பதை இராணுவம் மட்டுமே அறியும். அதிகாரபூர்வமற்ற செய்திகள் ஆறாயிரத்திலிருந்து பத்தாயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனக் கூறுகின்றன. உண்மையில் அரசாங்கம், இராணுவம், காவற்துறை சம்பந்தமான எல்லாத் தகவல்களுக்கும் தணிக்கையைக் கொண்டுவந்துள்ளது. கொல்லப்பட்டோர் காயம்பட்டோர் தொகைகள் எதுவுமே பிரசித்தப்படுவதில்லை. இராணுவத்தின் திட்டங்கள் சம்பந்தமாகவும் எதுவும் சொல்லப்படுவதில்லை.

இந்த நடைமுறையின் ஒரேயொரு விதிவிலக்காக இருப்பவர் உதவிப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



New Doc 2020-01-25 11.24.59_page-0028.jpg

பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்ததான். இவர் தன்னைத் தளபதி என்றே கூறிக்கொண்டாலும் இவரது இராணுவ அனுபவம் தேசிய பாதுகாப்புச் சேவையளவு தான். இவருக்கு மிகவும் பிடித்தமான விஷயம் என்னவெனில், தளபதிக்கு பூரண இராணுவச் சீருடையை அணிந்துகொண்டு தனது இராணுவத்தினரைக் காணச் செல்லும் சந்தர்ப்பங்களில் உள்ளூர் பத்திரிகையாளர்களையும் அழைத்துச் செல்வதுதான்.

ஒன்றரை வருடகாலமாக நடைபெற்ற படையெடுப்பு தோல்வி காரணமாக நிறுத்தப்பட நேர்ந்த இச் சந்தர்ப்பத்திலும் வடகிழக்கிலுள்ளதொரு புதிய போர்முனையையிட்டுப் பேசுவதில் அவர் கண்ணாக இருந்தார். தமிழ்ப் புலிகளிடமிருந்து ஒரு சிறிய பிரதேசத்தை இராணுவம் கைப்பற்றிய போது அது இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளதைக் காண்பிக்குமுகமாக அவர் பத்திரிகையாளர்களை அழைத்திருந்தார். ஆனால் இந்நிகழ்ச்சியின் நடுவில் தமிழ் புலிகள் அவர்களிருந்த இடத்தில் மோட்டார்குண்டு மழைபொழியவே, அதனில் அகப்பட்ட நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டு 42 பேர் காயமுற்றனர். மயிரிழையில் உயிர் தப்பினார் ரத்வத்தை. பின்னர் வெலவெலத்து நிற்பது வெளிப்படையாகவே தெரிய உதவிப்பாதுகாப்பு அமைச்சர் பின்னவருமாறு தெரிவித்தார்.

"மோட்டார் குண்டுகள் எல்லா இடமும் வெடித்தன, உலங்குவானூர்தி இறங்கும் இடத்தை நாம் அடைவதற்குள் பெரும்பாடாகிப் போய்விட்டது".


அன்றைய தினம் பொதுத் தொடர்புத் துறையில் புலிகளுக்கே பெருவெற்றி. ஆனால், இதற்குப் பழிவாங்குவதுபோல் சிங்கள அரசு, பாதுகாப்பு அமைச்சின் 1999–ம் ஆண்டுச் செலவுக்கு இதுவரை இல்லாத பெருந்தொகையான 5 கோடி குறோணர்களை (50 கோடி ரூபாய்கள்) ஒதுக்கியுள்ளது.

**தமிழில் அ.பாலமனோகரன்**

# ஐ.நா விடம் வை.கோ அறிக்கை



மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளரும் தமிழீழ விடுதலை ஆதரவாளருமான திரு. வை.கோபாலசாமி அவர்கள் ஐக்கியநாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதி ஆணையாளருக்கு இலங்கையில் சிறீலங்கா அரசும் இராணுவமும் மேற்கொண்டு வரும் அடக்குமுறைகள் பற்றி அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளார். அவ் அறிக்கையில் கைது - தடுத்துவைப்பு - சித்திரவதை, படுகொலைகளும் காணாமல் போதலும், சிறீ




லங்கா அரசு மனித உரிமையைக் காப்பாற்றாமல் போனது, இடம்பெயர்ந்த மக்களும் அகதிகளும், உணவு - மருந்துகளிற்குத் தடை, மலையக மக்களை தரப்படுத்தல், பண்பாட்டு அடையாளத்தை அழித்தல், போரின் விளைவு, மனித உரிமை மீறல்களும் மனிதாபிமானச் சட்டங்களும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, அரசின் சமாதானத் திட்டமும் சர்வதேச மத்தியத்துவமும் போன்ற விடயங்களை உள்ளடக்கி ஒக்டோபர் 98-ல் ஜெனிவாவில் உள்ள ஐ.நா. சபையின் மனித உரிமைகள் உதவி ஆணையாளரிடம் சமர்ப்பித்தார். ■





தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

New Doc 2020-01-25 11.24.59_page-0029.jpg

# சந்திரிகா ஆட்சியில் போர் விரிவடைந்தது



> தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை நீதியான முறையில் சமாதான வழியில் தீர்த்துவைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதியும் சந்திரிகா அரசிடம் இல்லை. தமிழரின் தேசிய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஓர் உருப்படியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவும் சந்திரிகாவிடம் துணிவில்லை

சிங்களத்தின் ஒடுக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் ஆட்சிக்காலம்தான் தமிழினத்திற்குச் சாபக்கேடாக அமைந்தது. இந்த மூன்று ஆண்டுக்காலத்தில் அவலத்திற்கும் இம்சைக்கும் ஆளாகாத தமிழர்களே இல்லையெனலாம். சந்திரிகாவின் ஆட்சியில்தான் போர் விரிவடைந்து பெரும் தீயாகப் பரவி தமிழர் தேசத்தைச் சுட்டெரித்தது. இதனாற் சனசமுத்திரமாக மக்கள் இடம்பெயர்ந்து இருப்பிடமின்றி அவலப்பட்டனர். தமிழரின் வரலாற்றுப் புகழ்மிக்க பாரம்பரிய நிலங்கள் இராணுவ அடக்குமுறையாட்சிக்கு உட்பட்டன. மாறிமாறி நிகழ்ந்த படையெடுப்புக்களோடு உணவு, மருந்துத் தடைகளையும் அரசு இறுக்கிவந்ததால் பசியும் பட்டினியும் நோயும் சாவுமாக தமிழ் மக்கள் சந்தித்த இன்னல்களைச் சொல்லி விபரிப்பது கடினம்.

ஐம்பது ஆண்டு காலமாக, முடிவின்றி நீண்டுசெல்லும் சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குமுறையானது சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் தான் மிகவும் தீவிரமான கடும்போக்கை எடுத்தது எனலாம். தமிழரின் தேசிய சுதந்திர இயக்கமாகிய விடுதலைப்புலிகளை நசுக்கி, தமிழினத்தைச் சிங்கள இராணுவ ஆட்சியின் கீழ் அடிமைப்படுத்துவது தான் அரசின் அடிப்படையான நோக்கம். இந்த இராணுவத் தீர்வை நடைமுறைப்படுத்துவதில் தான் முழு



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

New Doc 2020-01-25 11.24.59_page-0030.jpg

முனைப்போடு செயற்பட்டு வருகிறது சந்திரிகா அரசு.

தனது பாரிய இராணுவத் திட்டத்தையும் அதன் விளைவாக தமிழருக்கு ஏற்பட்டுவரும் பேரவலங்களையும் மூடிமறைத்து உலகத்தின் கவனத்தைத் திசைதிருப்பும் நோக்கில், சந்திரிகா அரசானது தீர்வுப் பொதி என்ற நாடகத்தை அரங்கேற்றியது. இந்த அரசியல் நாடகத்தின் சூட்சுமத்தை உலக நாடுகள் புரிந்துகொள்ளவில்லை. சந்திரிகாவின் தீர்வுப் பொதியானது இராணுவத் தீர்வுத் திட்டத்தின் மறுமுகம் என்பதை உலகம் கண்டுகொள்ளவில்லை. மாறாக சிங்கள அரசின் சாணக்கியமான பிரச்சார மாயையில் மயங்கி உலக நாடுகள் சந்திரிகாவின் தீர்வுப் பொதிக்கு கண்மூடித்தனமாக ஆதரவு வழங்கின. சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தமிழ்த் துவேசப் போக்கினால் தமிழர் முகம் கொடுத்த கசப்பான வரலாற்று அனுபவத்தைக் கருத்தில் கொள்ளாது அவசரப்பட்டு உலக நாடுகள் எடுத்த இம் முடிவு எமக்கு ஒருபுறம் வியப்பையும் மறுபடியும் ஏமாற்றத்தையும் கொடுத்தது. சர்வதேச உலகம் சந்திரிகாவின் சார்பாகத் திரும்பியதால் துன்பம் தோய்ந்த தமிழரின் அவலக்குரல் உலகத்தின் மனச்சாட்சியை உறுத்தவில்லை.

சந்திரிகாவின் தீர்வுப் பொதி தமிழரின் அடிப்படையான தேசிய அபிலாஷைகள் எதையும் தொட்டு நிற்கவில்லை. காலத்திற்கு காலம் தேய்ந்து தேய்ந்து உள்ளடக்கம் உருக்குலைந்து வரும் இத் தீர்வுத் திட்டம் இரண்டரை வருடங்களாக இழுபட்டு இன்னும் முழுமை பெறவில்லை. எனினும் இத்திட்டத்தின் நோக்கம் தெளிவாகத் தெரிகிறது. தமிழரின் தேசியத் தனித்துவத்தையும் தாயகத்தையும் மறுதலித்து தமிழர் தேசத்தைச் சிங்கள இறையாட்சியின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வருவதுதான் இதன் குறிக்கோள். இராணுவத்தீர்வின் நோக்கமும் இதுதான். எனவே சந்திரிகாவின் அரசியற் பொதியும், இராணுவத் திட்டமும் ஒரே நாணயத்தின் இரு முகங்களாகவே எமக்குத் தெரிகின்றன.

விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதான வழியில் அரசியற் தீர்வை திருப்ப வில்லையெனச் சந்திரிகா அரசு கூறுவதிலும் உண்மையில்லை. நாம் சமாதான வழியில் அரசியல் தீர்வை விரும்பியதால்தான் திம்பு தொடக்கம் யாழ்ப்பாணம் வரை பல பேச்சுக்களிற் கலந்து கொண்டோம்.



தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை நீதியான முறையில் சமாதான வழியில் தீர்த்துவைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதியும் சந்திரிகா அரசிடம் இல்லை. தமிழரின் தேசிய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஓர் உருப்படியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவும் சந்திரிகாவிடம் துணிவில்லை. இந்த இயலாமையை நியாயப்படுத்தத் தீவிர பேரினவாத சக்திகள் மீது பழியைச் சுமத்த முனைகிறது அரசு. உண்மையில் சந்திரிகாவின் அரசும், சிங்கள பௌத்த பேரினவாதத்தைக் கட்டியெழுப்பி அதனைப் பூதாகரமாக வளர்த்துவிட்ட சந்திரிகாவின் அரசியற் கட்சி, இப்போது அந்தத் தீவிரவாத சக்திகள் மீது குறைகூறுவது அபத்தமானது.

விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதான வழியில் அரசியற் தீர்வை திருப்பவில்லையெனச் சந்திரிகா அரசு கூறுவதிலும் உண்மையில்லை. நாம் சமாதான வழியில் அரசியல் தீர்வை விரும்பியதால்தான் திம்பு தொடக்கம் யாழ்ப்பாணம் வரை பல பேச்சுக்களிற் கலந்து கொண்டோம். இப்பேச்சுக்களின் போது நாம் தமிழினத்தின் நலனில் உறுதியாக நின்றோம். சிங்கள அரசுகள் தமிழ் மக்களுக்கு நீதிவழங்க மறுத்தன. இதனாற் பேச்சுக்கள் வெற்றிபெறவில்லை. இதற்கு எம்மீது குறைகூறிப் பயனில்லை. சிங்கள அரசுக்களின் விட்டுக்கொடாத போக்கே இந் நிலைமைக்கு காரணம். ■

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# நியதிகளின் நிர்ப்பந்தம்

மனிதகுல வரலாற்றில் எல்லா காலகட்டங்களிலும் வெவ்வேறு சமூகங்களாகவோ இனங்களாகவோ பிரதேசங்களாகவோ தனி அலகாக தனித்துவத்தை கண்ட மனிதன் தனக்கே உரிய வாழ்க்கை முறைகளையும் ஒழுங்குகளையும் வகுத்தே வந்துள்ளான். இதன்படி எல்லோரும் ஒழுக வேண்டும் என்பதே வாழ்க்கையின் நியதியாகியது. இந்த நியதிகள்தான் மக்களை ஓரே வழியில் நெறிப்படுத்தின. ஆனால் இவ்வாறான ஒழுங்கு முறைகளும் விதிகளும் சமூகத்தின் தேவைக்கேற்பவும் சூழலுக்கேற்பவுமே அக்காலகட்ட மனித அறிவியல் தளத்திலிருந்து உருவாகியவை. இதுமட்டுமல்லாது அரசு, பேரரச உருவாக்கங்கள் ஆக்கிரமிப்பு உணர்வை மேலோங்கச் செய்ததால் ஆள்பவன் தனது நலனின் பொருட்டு ஆளப்படுவோருக்கான வாழ்க்கை முறைகளையும் விதிகளையும் வகுத்தான். இவையும் மக்களின் வாழ்க்கை நியதிகளாக உருக்கொண்டன. இவ்வாறான நியதிகள் எல்லாமே மதம் சார்ந்த கோட்பாடுகளாகவே அர்த்தம் கற்பிக்கப்பட்டன. இவ்வாறான நியதிகளின் அடிப்படையில் அமைந்த வாழ்க்கை முறையே கலாச்சாரம் ஆகியது. இவை வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள் விளைவுகள் பற்றி ஆய்ந்து அறிவது எமது வாழ்வை நெறிப்படுத்த வழிகோலும்.



ஒரு சமூகத்தின் குறிப்பிட்ட காலகட்டத்தின் தேவைக்கேற்ப அக்காலகட்ட மனித அறிவியல் தளத்தில் இருந்து உருவாகிய நியதிகள் எக்காலத்திற்கும் எந்த சூழலிற்கும் பொருந்தும் [illegible] தாக இருக்கமுடியாது. உலகில் உள்ள அனைத்துமே இடையறாத மாற்றத்திற்கு உட்பட்டே வருகின்றன. நிரந்தரமானதென்று எதுவுமே இருக்கமுடியாது. இது இயங்கியல் அடிப்படை, இன்று எங்கோ உயர்ந்து வளர்ந்துவிட்ட அறிவியல் தளத்தில் வாழும் மனிதனுக்கு பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளின் முன்பு உருவாக்கப்பட்ட நியதிகள் அவனின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமா? இவை மனித வாழ்விற்கு முட்டுக்கட்டையாகவும் இடையூறுகளாகவும் புதிய வீச்சுடன் வாழ்வை சிருஷ்டிக்க மறுப்பதாகவும் அமைந்து மனித வாழ்வை சீரழித்து விடுகின்றது. இவ்வகையான முரண்பாட்டை விளங்குவதற்கு ஒரு உதாரணத்தைக் கொள்வோம். முன்பு ஒரு காலகட்டத்தில் மனிதன் நெருப்பை உருவாக்குவதற்கு மத்துக்குள் சிலவகை மூலிகைகளைப் போட்டு கடைந்து நெருப்பை உருவாக்கினான். அதிலுள்ள கடினத் தன்மை காரணமாக அது தனது சக்திக்கு அப்பாற்பட்டது எனக் கருதி தெய்வங்களை வழிபட்டு, சில சடங்கு முறைகளைச் செய்தபின்பே மத்தைக் கடைந்து நெருப்பை உருவாக்கினான். இந்த நெருப்பைக் கொண்டே சமையல் செய்தான். இன்று Hotplate—ல் சமைக்கும் மனிதனுக்கு சுவிட்ச்சை அழுத்த முன்பு அன்றைய மனிதனின் சடங்கு முறையை பின்பற்ற வேண்டுமென்

கு.கவியழகன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பது எத்தனை மூடத்தனமானதோ அத்தகைய இன்றைய சூழலில் வாழும் மனிதனுக்கு பழைய நியதிகளின் அமைவு இருக்கப்போகின்றது.

எமது தமிழ் சமூகத்தில் உள்ள நியதிகள், கலாச்சாரம் என்ற போர்வையிலோ அல்லது தர்மம் என்ற போர்வையிலோ ஆரோக்கியமான வாழ்வைக் காண்பதற்கு என்றும் தடையாகவே அமைந்துள்ளது. சாதியம், பெண்ணியம் இன்றும் பிற்போக்கான சடங்கு முறைகள், மூட நம்பிக்கைகள் என்பவை தேசிய ஒருமைப்பாட்டிற்கும், சமத்துவமான வாழ்விற்கும், ஆரோக்கியமான சிந்தனைக்கும் தடையாகவே இருந்தது. பெண்ணியம் தொடர்பான சீதனம், உழைப்பு, மறுதிருமணம், சமூகப் பங்கெடுப்பு போன்றவற்றிற்கான எமது சமூக நியதிகள் சமூகத்தின் அனைத்து அங்கத்தவரின் வாழ்வையும் சுமையாக்கியது. இவையெல்லாம் ஆக்கிரமிப்பாளருக்கு சாதகமாக எம்மை பலவீனமான நிலையிலேயே வைத்திருந்தது. பிற்போக்கான நியதிகள் எம்மை ஆக்கிரமிக்க எம் வாழ்வியலில் நாம் இடம் கொடுத்ததன் விளைவு எதிரியின் ஆக்கிரமிப்புக்குள்ளாகி எம் வாழ்வு மறுக்கப்பட ஆளாகினோம்.

காலம் காலமாக கடத்தப்பட்டு வரும் இத்தகைய பிற்போக்கான நியதிகள் தவறான அர்த்தத்தோடு இப்போதும் சமூகம் எம் மீது திணிக்கின்றது. அதற்கு எம்மைப் பழக்கப்படுத்த முனைகிறது. இதை உள்வாங்கிவிட்ட நாம் புதிய வாழ்விற்கு தகுதியற்றவர் ஆகின்றோம். எமது புதிய சிந்தனை மழுங்கடிக்கப்படுகிறது. என்றோ ஒரு காலகட்டத்தில், எவரினதோ தேவைக்காக, எவராலோ உருவாக்கப்பட்ட நியதிகளை இன்று எமது வாழ்வின் முறைகளாக ஏற்றுக்கொள்ளுமாறு சமூகம் எம்மை வற்புறுத்துகிறது. கலாச்சாரம் என்பதற்கு தவறான தவறான விளக்கத்தைக் கொண்டிருக்கும் சமூகம் கலாச்சாரம் என்பதை பாரம்பரியம் என்கிறது. பாரம்பரியம் என்பது பழையதுதானே. பழைய முறைகள் தான் கலாச்சாரம் என்றால் அதன் படி நாங்கள் வாழ்வதுதான் சரியானது என்றால் நாங்கள் குரங்காக மாறுவதே சரியானது. மனிதன் தன் ஒவ்வொரு காலகட்டத்திலும் பாரம்பரியத்தைப் பேணி அதன்படி வாழ முனைந்திருந்தால் மனிதன் இன்று குரங்காகவே இருந்திருப்பான். இதற்காக கலாச்சாரம் பிழையானதென்றோ அப்படி ஒன்றில்லை என்பதோ பொருளல்ல. கலாச்சாரம் என்பது பழைய சிறப்புக்களைப் பேணியும், புதிய பொருத்தப்பாட்டை உள்வாங்கியும் இன்றைய சூழலிற்கேற்ப மனித வாழ்வை நெறிப்படுத்தக்கூடியனவாக ஆரோக்கியத்துடன் அமைய வேண்டும். இத்தகைய, கலாச்சாரம் என்பதன் உள்ளடக்கத்தை உணர்ந்து கொண்டு வாழ்வு வழிநடத்தப்பட வேண்டும். இதன் யதார்த்தத்தை உணராமல் இன்றைய உலகில் இவை சரியென்னும் மனநிலையோடு வாழ்வை அமைக்க முயல்பவர்கள் கருத்தியல் அர்த்தத்தில் ஒருவகையில் மனநோயாளிகளே. நாம் மனநோயாளிகள் என்று உணராமலேயே அவ்வாறு இருந்துவிடுகின்றோம்.

"மனிதர்களை உருவாக்கும் மதமே எமக்கு வேண்டும். வீரரை உருவாக்கும் கல்வியே எமக்கு வேண்டும். இதுதான் உண்மைக்கு உரைகல். உங்கள் உடலையும் அறிவையும் பலவீனமாக்கும் எதையும் விஷமென ஒதுக்கிவிடுங்கள். அதில் உயிரில்லை அது உண்மையானதல்ல" இது சுவாமி விவேகானந்தரின் கூற்று.

இன்று எமக்கு தேவையானதெல்லாம் இதுதான். நாம் யதார்த்தத்தை புரிந்து கொண்டவர்களாக புதிய சிந்தனை வீச்சோடு ஆரோக்கியமான வாழ்வை வாழவேண்டும். சமூகத்திணிப்புகளில் இருந்து விடுபட்டு முற்போக்கான புதிய சிந்தனையை உருவாக்க வேண்டும். இன்றைய அறிவியல் தளத்தில் இருந்து முற்போக்கான சிந்தனையோடு, பழைய சிறப்புக்களை இனங்கண்டும் எமது தேவைக்கேற்ப பொருத்தமான புதிய பொருத்தப்பாடுகளை இணைத்தும் புதிய வாழ்வைக் காண விளைய வேண்டும். பழைய பிற்போக்கான நியதிகளை உடைத்தெறிந்து எழுச்சி கொள்ளும் எமது சிந்தனை வீச்சு சுதந்திரமான, சமத்துவமான, கௌரவமான வாழ்வை படைக்க வேண்டும். ▣

# ஏன்?

இமய மலை மறைக்கப்படுகின்றதே
சூரியனிலிருந்து வியர்வை விழுகின்றதே
எரிமலைக் குழம்புகளும்
எரிந்து முடிந்த
கடதாசியின் கருக்கல்களாய்
தோன்றுகின்றதே
ஏன்?! ஏன்?!!
ஓ!!!
இது புலிவீரன் எதிரியுடன் மோதுகின்ற நேரம்

பொன்.காந்தன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# பாதியில் முடிந்த பயணங்கள்

சிறுகதை

அண்டைய நாளை நினைத்துப் பார்க்கிறன். நெஞ்சுக்குள் முட்டுமாப் போல ஒரு உணர்வு. கண் எல்லாம் எரிஞ்சு கொண்டு வருகுது. கண்ணீரும் வருகுது. அப்படியே என்னை அறியாமல் அந்த நாளை அசைபோடத் தொடங்கிறேன்.

அண்டைக்கு இருந்தாப்போல இந்த ஆமிக்காரன் பலாலிப் பக்கம் இருந்து ஒரே மேளச் சமா. மேளச்சமா எண்டு சொல்லலாமோ? அவன் பூபாளம் பாடி எழும்பிற அந்த வெள்ளன விடிகாலை விடாம 'ஷெல்' அடிச்சு எத்தனை சனத்தை வாழ்நாள் பூரா முகாரிபாட வைச்சுக்கொண்டிருந்தான். பத்தாதத்துக்கு அவன்ட பொம்மர்களும் புக்காராக்களும் அடிவாங்கினதை மறந்து, பறந்து பறந்து கண்டமேனிக்கு குண்டு போட்டுக்கொண்டிருக்குதுகள்.

சனம் எல்லாம் அல்லோலகல்லோலப்பட்டுக் கிடைச்ச பொருளும் நிண்ட கோலமுமாய் தெருவால வேற இடத்துக்கு வெளிக்கிட்டுதுகள். அதுகளப் பார்க்க வேணும், பேயறைஞ்ச முகமும், கலங்கின கண்களும், நடந்த களையுமாய், சிலசனம், பக்கத்தில் வந்ததுகள் ஷெல்லில் சாக, உடம்பைக் கூடத் தூக்க நேரமில்லாமல் ஓடி வந்ததுகள். அதுகள் அழுதுகொண்டு வாறதும் தங்கட இனஞ்சனத்தைக் கண்டதும் றோட்டில உடுப்பு அவிழுறதும் தெரியாமல் புரண்டு அழுகிறதும் பெரிய விசராய்க் கிடந்தது.

அப்பத்தான் யாரோ "கந்தரோடைக்கும் ஆமி வந்திட்டாம்" எண்டு சொல்லிக்கொண்டு போனது காதில் விழுந்தது. டக்கென்று மூளைக்குள்ள மின்னல் பாய்ஞ்ச மாதிரி ஒரு அதிர்ச்சி. எங்கட ஜெயதா கந்தரோடை எல்லே; அடக்கடவுளே அவள் என்ன செய்திருப்பாள்? "ஏதோ நடந்திருக்குமோ?" அதுக்குள்ள மூளை அபசகுணமாய் நினைக்குது. "ச்சீ" இவ்வளவு சனம் வரேக்க அவையும் வந்திருப்பினம். பாவம் அவள் தனிய தன்ர அப்பா அம்மாவை என்னண்டு கூட்டியந்திருப்பாள். தமக்கையும் நெருப்புக்காய்ச்சல் வந்து ஏலாமல் இருந்தவா.



யோசிச்சுக் கொண்டிருக்கேக்கைதான் என்னோட படிக்கிற மற்ற ரெண்டு பேர் வீட்ட வந்தினம். தாங்கள் ஜெயதாவின்ட அம்மாவைய 'லேடிஸ் கொலிஜ்' காம்பில தூரத்தில கண்டவையாம் என்று சொல்ல எனக்குப் பெரிய நிம்மதி.

பேந்து என்ன, நான் என்ட பாட்டுக்கு கம்பசுக்குப் போய் அங்க வந்திருந்த அகதிச் சனத்துக்கு எங்கட ஆக்கள் சமைக்க உதவி செய்துபோட்டு வீட்ட வர வீட்டில எல்லாரும் ஒரு மாதிரி இருக்கினம். முதலில நான், கவனிக்கேல, என்ர பாட்டுக்கு புதினம் சொல்ல அவை எல்லாரும் 'உம்' எண்டு கொண்டு இருக்கினம். பின்னத்தான் என்ட அலட்டலை நிற்பாட்டி என்ன எண்டு கேட்டன்.

"ஜெயதா..."

"ஓம் ஜெயதாவுக்கு என்ன?"

"ஷெல் பட்டு...."

"ஷெல் பட்டு ? காயமே, ச்சீ



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவளின்ர அம்மா லேடிஸ் கொலிஜ்ல நிக்கிறாவாம்"

"இல்ல வடிவாத் தெரியாது. முடிஞ்சுது எண்டு கதை" அவை தயங்கித் தயங்கிச் சொல்ல, ஒருகணம் அதிர்ந்து தான் போனேன். "ஜெயதாவோ? இருக்குமோ. எங்கட ஜெயதாவோ இண்டைக்கு என்ன கிழமை? திங்கள். போன வெள்ளிகூடக் கண்டனான். ஜெயதாவோ? இருக்காது. இதுகளுக்கு விசர். சும்மா வதந்திகளைக் கேட்டுப்போட்டு தாங்களும் குழம்பி மற்றவையையும் குழப்புதுகள்" அதற்குப் பிறகு எனக்கு வந்துதே ஒரு கோபம் கண்மண் தெரியாத கோபம்.

"உங்களுக்கு கொஞ்சம் எண்டாலும் அறிவிருக்கே. சும்மா பிரச்சினை எண்டா இப்படித்தான் அறுவத்தெட்டுக் கதை வரும் அதுக்கு ஜெயதாவைப்பற்றி இப்படிச் சொல்லுறதே. விசருகள்" கத்தினதில கொஞ்சம்மூச்சு வாங்கிற்று. ஆனா ஏதோ நிம்மதி. ஒரு அநியாயத்தை தடுத்த மாதிரி. வீட்டுக்காரரின்ட முகமும் கொஞ்சம் தெளிவா வந்திட்டுது. நான் ஒன்றும் நடக்காத மாதிரி அங்கால போட்டன். ஆனாலும் மனதில ஒரு குறுகுறுப்பு. சரி அங்கால அவளவை மலராக்கள் இருக்கிறாளவை. அவையிட்ட போய்க் கதைப்பம். வீட்டுக்காரருக்கும் சொல்லாமல் சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளிக்கிட்டன். அங்க போனால்....

மலரும் ரதியும் முழுகிக் கொண்டு நிக்குதுகள். கேட்டால் சுடலைக்குப் போட்டு வந்ததுகளாம். செத்தவீடு கொண்டாட இடமில்லை எண்டு றோட்டில வைச்சு தாய்க்குத் திறந்து முகத்தைக் காட்டிப்போட்டு, நேர சுடலைக்கு கொண்டுபோய் ஜெயதாவ எங்கட ஜெயதாவை எரிச்சாச்சாம். "ஜெயதா! எப்படி இது சாத்தியம். நேற்றைக்கும் உடனிருந்து சிரித்தவள் வரப்போகும் பரீட்சைக்கு பாடம் படித்தவள், படிப்பு முடிந்து வாழ்க்கைக்கு ஆவலாயிருந்தவள் எப்படி நீ போகலாம்"

நான் நேரங்கழியிறது தெரியாமல் எதிரில தோயிற மலர, ரதிய, அதில நிற்கிற என்ர அந்த நேர இருப்ப நம்பமுடியாமல் நிற்கிறன்.

"முகம்மட்டும் வடிவாயிருந்தது. நெஞ்சுக்கு கீழ எல்லாம் சிதறிப்போச்சு. அவசரத்தில கேட்டின் சீலையாலதான் மூடியிருந்தது. கம்பிகூட கழட்டேல. சில இடத்துக்கு தேமா இலையும் போட்டு..."

நாங்க அவயிருந்த வீட்ட போனனாங்கள். சுடலைக்கு கொண்டு போயாச்சாம் என்டோடன சுடலைக்கு ஓடினம். நாங்கள் நாலுபேரும் தான் 'பிரண்ட்ஸ்' மிச்சம் ஆறேழு பேர்"

அவை சொல்லுறது ஏதோ கனவில கேட்கிற மாதிரி இருந்தது. நான் இப்பவும் அப்படியே நிற்கிறன்.

"பிள்ள, மகள்" அம்மா கூப்பிடுறா. அவசரமாய்க் கன்னத்தில் வழிஞ்ச கண்ணீரைத் துடைச்சுக் கொள்ளுறன். பேந்து அம்மா பார்த்தா குழம்புவா. காரணமும் சொல்ல வேணும்.

எண்டாலும் ஜெயதாவை எப்படி மறக்கிறது. அவளும் எங்களப் போலத்தான். பாவம் கஷ்ரப்பட்டு படிச்சு கம்பசுக்கும் எடுபட்டு, பேந்தும் மூண்டு வருஷம் படிச்சு முடியிற நேரத்தில, எத்தனை கனவோட இருந்திருப்பாள்? அவளிண்ட தகப்பன் சரியா இடிஞ்சு போச்சு. பாவம் தாயும் அரைவாசியாயிட்டுது. அதுகளும் மகளுக்கு செய்ய, மகள் தங்களுக்கு செய்ய எண்டு எத்தனை கனவோட இருந்திருக்குங்கள். எங்கட சனத்துக்கு கம்பஸ் கிடைச்சா ஏதோ பிறவிப்பயன் அடைஞ்ச மாதிரியெல்லே. அப்பிடி கிடைச்சு இப்படி அரைவாசில அவலமாய்ப் போற எண்டா?

இவள் மட்டுமே, இந்த அநியாயப்படுவாரால? ஆதிக்கக்காரரால எத்தினை இப்படிப் போச்சுது. அவன் இந்தியன் ஆமி ஒரு பக்கம். சிறீலங்கன் ஒரு பக்கம்.

ம்ம்..... பாதில முடிஞ்ச பயணங்களா நினைவை மட்டும் எங்களிட்ட விட்டுட்டு ஜெகநாதன், சத்தியேந்திரா.... இண்டைக்கு இந்த ஜெயதாவும்.

■

**-துஷி-**

---



எமது போராட்ட வாழ்வின் உண்மைகளைக் கலை இலக்கியப் படைப்புக்கள் தரிசித்து நிற்கவேண்டும்; எமது சமூக வாழ்வியக்கத்தின் சகல பரிமாணங்களிலும் ஆழமாக ஊடுருவி நிற்கும் இன ஒடுக்கு முறையின் கொடூரத்தினை சிருஷ்டி கர்த்தாக்கள் சித்தரித்துக் காட்டவேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive
New Doc 2020-01-25 11.24.59_page-0035.jpg

# புலம்பெயர் களமும் புகலிடத் தமிழர்களின் வரலாற்றுக் கடமைகளும்

"மனிதர்களாகிய நாம் எமது கடந்தகாலத்துடனும் எதிர்காலத்துடனும் எங்களுடைய ஒவ்வொரு செயற்பாடுகளையும் தொடர்பு படுத்திப்பார்க்கவேண்டும். இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற வயதான மனிதர்களுடன் நமக்குள்ள பிணைப்பானது கடந்த காலம் நம்மிடையே பிரதிநிதித்துவப்படுவதற்கு சான்றாகும். இந்தக் கடந்த காலத்தை நாம் புரிந்துகொண்டு அதனுடன் கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் இந்தக் கடந்த காலம் தான் நிகழ்காலத்தின் ஒரு கூறாகவும் வருங்காலத்திற்கான ஒரு அடிப் படையாகவும் விளங்குகின்றது. நாம் நமது குழந்தைகளுடனும் இப்போது பிறந்து வளர்ந்துகொண்டிருக்கும் புதிய தலைமுறையினருடனும் பிணைக்கப்பட்டிருக்கின்றோம். இவர்களுக்கு நாம் தான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் இவர்களுடைய எதிர்காலத்தை எங்களுடைய நிகழ்காலம் தான் தீர்மானிக்கப் போகின்றது".

அந்தோனியோ கிராம்ஷி
இத்தாலியத் தத்துவவாதியும்
புரட்சியாளரும்

ஐரோப்பிய சமூகம் புதிய சிந்தனைகளுடனும் புதிய பாய்ச்சல்களுடனும் 21-ம் நூற்றாண்டை வரவேற்கக் காத்திருக்கும் இந்தக் கால கட்டத்தில், ஐரோப்பாவுக்குப் புலம்பெயர்ந்து வந்த மக்களுடைய (பல்வேறு தேசிய இனங்கள்) நிலை அவ்வளவு திருப்திதரக்கூடியதாக இல்லை என்று இங்கு மேற்கொளப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மற்றும் பண்பாட்டுக் கலாச்சாரச் சூழலில் தங்களது சொந்தப் பண்பாட்டுக் கலாச்சார விழுமியங்களைக் காப்பாற்ற நினைக்கும் புலம்பெயர்ந்த மக்கள் அதுபற்றிய ஆழமான பார்வையும் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பு ரீதியான செயற்திட்டமும் இல்லாத காரணத்தினால் தங்களது முயற்சியில் தோற்றுப் போய் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொண்டு தங்களுக்குத் தாங்களே எல்லைக் கோடுகளைப் போட்டுக் கொண்டு மிக மோசமான தனிமைக்கும் விரக்திக்கும் அந்நியமாதலுக்கும் உள்ளாகியிருக்கின்றார்கள்.

குடும்பங்களிடையே உண்மையான அன்பும் மகிழ்ச்சியும் நிம்மதியும் இல்லை. கணவன் மனைவியரிடையே விரிசல்கள் வளர்ந்துவிட்டன. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான இடைவெளி தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. இளைய தலைமுறையினர் ஐரோப்பிய சமூ

> குடும்பங்களிடையே உண்மையான அன்பும் மகிழ்ச்சியும் நிம்மதியும் மகிழ்ச்சியும் இல்லை. கணவன் மனைவியரிடையே விரிசல்கள் வளர்ந்துவிட்டன. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான இடைவெளி தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. இளைய தலைமுறையினர் ஐரோப்பிய சமூகத்திலுள்ள புதிய சிந்தனைகளையும் புதிய பாச்சல்களை கற்றுக் கொள்வதற்குப் பதில் அதே அளவுக்கு இங்கே வளர்ந்திருக்கும் சீரழிவுக் கலாச்சாரத்தில் சிக்குண்டு தங்களை தங்களது எதிர்காலத்தை அழித்துக் கொள்ளும் போக்கு அதிகரித்து வருகின்றது



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கத்திலுள்ள புதிய சிந்தனைகளையும் புதிய பாச்சல்களையும் கற்றுக் கொள்வதற்குப் பதில் அதே அளவுக்கு இங்கே வளர்ந்திருக்கும் சீரழிவுக் கலாச்சாரத்தில் சிக்குண்டு தங்களை தங்களது எதிர்காலத்தை அழித்துக் கொள்ளும் போக்கு அதிகரித்து வருகின்றது. தினசரி ஒரு குற்றச் செயல் வாரம் – ஒரு தற்கொலை – மாதம் ஒரு கொலை என்ற கணக்கில் இந்த இளைய தலைமுறை தங்களது சாதனைப் பட்டியலை விரிவாக்கிச் செல்கிறது.

மூன்றாம் உலக நாடுகளிலிருந்து இங்கே ஐரோப்பாவுக்கு புலம் பெயர்ந்து வந்த மக்களுக்கு பொதுவாக இருக்கும் இந்தப் பிரச்சினைகள் புலம் பெயர்ந்த தமிழ் மக்களுக்கும்கூட விரைந்து தீர்வு காணப் படவேண்டிய அடிப்படை பிரச்சினைகளாக இருக்கின்றன.

தமிழர்களின் ஐரோப்பியப் புலம் பெயர்வு என்று பார்த்தால் இங்கு முதலில் புலம் பெயர்ந்து வந்தவர்கள் புதுவை (பாண்டிச்சேரி) த் தமிழர்களே! இவர்களது புலம்பெயர்வு 4 அல்லது 5 தசாப்தங்களுக்கு முன்பே தொடங்கிவிட்டது. புதுச்சேரி பிரெஞ்சுக் காலணியாக இருந்த காரணத்தினால் பிரான்ஸ் அரசாங்கம் வழங்கிய குடியுரிமைச் சலுகைகள் அதிக அளவில் புதுவைத் தமிழர்கள் இங்கு புலம்பெயர்ந்து வருவதற்கு வழிவகுத்தன. பிரெஞ்சுக் குடியுரிமை பெற்றவர்கள் என்ற அடையாளத்துடன் ஒரு குறிப்பிட்ட இலக்கை (நாட்டை) நோக்கிப் புலம் பெயர்ந்த இவர்கள் அநேகமாக அந்த இலக்குக்குள் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டுவிட்டார்கள். அதாவது பிரான்சின் பல்தேசியக் கலாச்சாரத்துக்குள் தங்களது தமிழ்க் கலாச்சாரத்தை கரைத்துவிட்டார்கள்.

ஆனால் இவர்களுக்குப்பின் கடந்த $2\frac{1}{2}$ தசாப்த காலத்தில் ஐரோப்பாவுக்குப் புலம் பெயர்ந்து வந்த ஈழத்தமிழர்களுடைய நிலை இவர்களது நிலையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. புதுவைத் தமிழர்களுக்கு பிரான்ஸ் குடியுரிமைச் சலுகை வழங்கியது போல் ஈழத்தமிழர்களுக்கு எந்த நாடும் குடியுரிமைச் சலுகை வழங்கத் தயாராக இருக்கவில்லை. (குறிப்பாக இங்கிலாந்து) அதைவிட ஈழத்தமிழர்களுக்கு இருந்த அரசியல் மாற்றம் யுத்த நெருக்கடிகளே அவர்களது புலம்பெயர்வுக்கு அடிப்படையாக இருந்தன. அதிலும் இவர்களின் இந்தப் புலப்பெயர்வு புதுவைத் தமிழர்களைப் போல் ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி – விருப்பத் தேர்வின் அடிப்படையில் பெரும்பாலும் நிகழவில்லை. சூறைக் காற்றில் அள்ளிச் செல்லப்படும் சருகுகள் இலக்கின்றி தரை சேர்வது போலவே ஈழத்தமிழர்களும் இலக்கின்றி எந்த ஐரோப்பிய நாடுகளில் ஓரளவுக்கேனும் சுலபமாக அரசியல் தஞ்சம் தற்காலிக வதிவிட அனுமதியும் கிடைத்ததோ அந்த நாடுகளுக்குள் ஒதுங்கிக் கொண்டார்கள். ஒரு விதத்தில் ஈழத்தமிழர்கள் தங்களது சுய அடையாளத்தை ஐரோப்பிய சூழலுக்குள் தொலைத்துவிடாமல் பாதுகாக்க உதவியிருக்கின்றது என்று சொல்லப்பட்டாலும் யதார்த்தத்தில் இதுவே இன்று அவர்கள் எதிர்கொள்ளும் "அந்நியமாதல்" தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக இருக்கின்றது.

ஒரு இனம் தனது சொந்தப் புலத்தைவிட்டு அந்நியச் சூழலுக்கு பெருமளவில் புலம்பெயரும் போது உடனடியாக அது தன்னுடைய மொழி, பண்பாடு, கலாச்சாரம், வரலாறு என்கின்ற நான்கு அடிப்படை விடயங்களில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது.

அதாவது தனி மனிதர்கள் சமூகத்தாலும் சமூகம் அரசாலும் ஆளுமை செய்யப்படுகின்ற இன்றைய அமைப்பில் எந்தவொரு தனி மனிதனும் எந்தவொரு சமூகமும் தன்னிச்சையான முடிவுகளை எடுக்கமுடியாது. அரசும் அதனுடைய சட்டங்களுமே சமூகத்தினுடையதும் அதனுடைய உறுப்பினர்களான தனி மனிதர்களினதும் அனைத்து செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துகின்றன / தீர்மானிக்கின்றன.

ஒரு தேசிய இனம் தன்னுடைய அரசையும் அதனுடைய சட்டங்களையும் புறக்கணித்துவிட்டு அல்லது தங்களுக்கென்று ஒரு அரசையும் அந்த அரசுக்கான சட்டங்களையும் உருவாக்காமல் வேறொரு அரசினுடைய அதிகார எல்லைக்குள் புலம் பெயர்ந்து தன்னுடைய இருத்தலை உறுதிப்படுத்த முயலும் போது தவிர்க்க முடியாத அந்த அரசினுடைய அதிகாரத்துக்கும் அதனுடைய சட்டங்களுக்கும் கட்டுப்படவும் மற்றும் அந்நாட்டின் பண்பாட்

## சிறுவர் அபிவிருத்தி ஆண்டு (1999)



இவ் ஆண்டை சிறுவர் அபிவிருத்தி ஆண்டாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரகடனப்படுத்தியுள்ளது. சந்திரிகா அரசின் உணவு நிவாரணம் மற்றும் பொருளாதாரத் தடை ஒருபுறமும் தமிழ் மக்களுக்கு எதிரான மோசமான இன அழிப்பு இராணுவ நடவடிக்கைகள் மறுபுறமுமாக தமிழீழத்தின் இளம் சந்ததியை மோசமாகப் பாதித்து வரும் இன்றைய நிலையில் இந்த அவலங்களிலிருந்து இளம் சந்ததியைக் காக்கும் நோக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சிறுவர் அபிவிருத்தி ஆண்டாக இவ் ஆண்டைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

டுச் சூழலில் வாழவும் நிர்ப்பந்திக் கப்படுகிறது.

உதாரணமாக ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள எந்தத் தமிழரும் தங்களது பிள்ளைகளுக்கு தாய்மொழியான தமிழ் மொழியில் கல்வி கற்பிக்கமுடியாது. பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் பாடசாலைகளில் பிள்ளைகள் தமிழ் மொழியை ஒரு பாடமாக கற்க வாய்ப்பிருந்தாலும் அந்தக் கற்பித்தல் என்பது பிரெஞ்சு அல்லது டொச் பாடத்துக்குள் உள்ளடக்கப்பட்ட தமிழ் கல்வியாகவே இருக்கிறது. அதுபோல் இங்குள்ள எந்தத் தொடர்புகளுக்கும், நிர்வாகக் கடமைகளுக்கும் நாம் தமிழ் மொழியை மட்டுமே பாவிப்போம் என்று எந்தத் தமிழரும் சொல்ல முடியாது. இங்கே தவிர்க்கமுடியாத படி புலம்பெயர்ந்த நாட்டு மொழிகளை ஏற்றுக் கொள்ளும் அந்தத் தளத்தில் செயற்படும் நிர்ப்பந்தம் தமிழர்களுக்கு ஏற்படுகின்றது. அவர்களது தாய்மொழியான தமிழ்மொழியின் செயற்பாட்டுத் தளம் நண்பர்கள் உறவினர்கள் கூடும் இடங்கள், வீடுகள் என்று மட்டுப்படுத்தப்படுகின்றது.

அதுபோலவே பண்பாடு என்று பார்த்தால் இங்கு புலம்பெயர்ந்த மூத்த தலைமுறையினரில் கணிசமான பகுதியினர் இவற்றை மறந்து விடாமல் இருக்க முயற்சி செய்தாலும் இளைய தலைமுறையினர் மத்தியில் "தமிழர் பண்பாடு, தமிழர் கலாச்சாரம்" என்கின்ற பதங்கள் அகராதியில் அர்த்தம் தேடும் நிலைக்குச் சென்றுகொண்டிருக்கின்றது.

உண்மையில் இது ஒரு தலைமுறை இடைவெளி சார்ந்த மிக முக்கியமான பிரச்சினையாகும். மூத்த தலைமுறையினருக்கு தமிழ் பண்பாடு – தமிழ் கலாச்சாரம் என்பன சொந்தப் பண்பாடாகவும் சொந்தக் கலாச்சாரமாகவும் ஐரோப்பியப் பண்பாடு – கலாச்சாரம் என்பவை மாற்றுப்பண்பாடாகவும் மாற்றுக் கலாச்சாரமாகவும் இருக்கும்போது அவர்களது பிள்ளைகளுக்கு இவை எதிர்மாறாகத் தெரிகின்றன.

ஏனெனில் அவர்கள் இங்குள்ள ஐரோப்பிய பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் நடைமுறையில் பார்க்கின்றார்கள். ஆனால் தமிழ் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் பெற்றோர்களுடைய போதனையின் மூலமும் தமிழ் சினிமாவின் மூலமுமே அவர்கள் பார்க்கின்றார்கள். இது ஒரு கற்பனாவாத யதார்த்தமாகவே அவர்களுக்குத் தெரிகின்றது.

வரலாறு என்கின்ற போது இங்கு ஐரோப்பிய நாடுகள் அதற்குக் கொடுக்கின்ற முக்கியத்துவத்தை நாம் கொடுப்பதில்லை என்ற உண்மையை முதலில் ஒத்துக்கொள்ள வேண்டும். இங்கு ஆரம்பப் பள்ளியிலிருந்தே வரலாறு பிள்ளைகளுக்குப் போதிக்கப்படுகின்றது. ஆனால் பெரியவர்களான நம்மவர்களுக்கு – பல்கலைக் கழக பட்டப்படிப்பு முடித்தவர்களுக்குகூட நமது சொந்த வரலாறு முழுமையாகத் தெரியாது. இதனால் நாங்கள் வரலாறு அற்றவர்கள், ஐரோப்பிய மேன்மைகள் எதுவும் எங்களிடம் இருந்ததில்லை என்கின்ற உணர்வு இங்கே பிறந்து வளர்ந்து கல்வி கற்கும் புதிய தலைமுறையினருக்கு உருவாகி வருகின்றது.

மொழி, பண்பாடு, கலாச்சாரம், வரலாறு என்ற இந்த நான்கு அடிப்படைகளை புலம்பெயர் சூழலில் நாம் எப்படிக் கையாளப்போகின்றோம் என்பதைப் பொறுத்தே – இந்த அடிப்படையான விடயங்களில் எங்கள் மீது தொடுக்கப்படும் அச்சுறுத்தல்களுக்கு எவ்வாறு முகம் கொடுக்கப் போகின்றோம் என்பதைப் பொறுத்தே புலம்பெயர்ந்த தமிழர்களின் எதிர்காலமும் அடுத்த கட்ட வளர்ச்சியும் தீர்மானிக்கப்படும்.

– நக்கீரன்

# எவர் தடுப்பார்

என் தமிழை நான் பாட
தடையுண்டோ – இவ்வுலகில்
எவர் தடுப்பார்? இனியும் எவர் தடுப்பார்?
சிங்களமே எம் மொழியின்
வலிமை தெரிந்தும் மோதுகிறாய்
கொஞ்சு தமிழில் நான் பா இயற்ற
செந்தணல் கொண்டு தடுப்பாயா?
விஞ்சு தமிழில் நான் கவி வடிக்க
தீம்புனலாய் வந்து தடுப்பாயா?
பைந்தமிழில் எம் மண் குளித்திட
பாவியே நீ தடுப்பாயா?
செந்தமிழில் செந்தூரம் அள்ளி வீசிட
வாடைக்காற்றாய் மாறித் தடுப்பாயோ?
சிங்களமே தடுத்துப் பார்
தேன் சொட்டும் ஒவ்வொரு தமிழும்
தேளாய்க் கொட்டும் போது
தெரியும் – எங்கள்
மொழியின் வல்லமை உனக்கு



இமையூர் இமையாளன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சந்திரிகா அரசின் நிவாரண வெட்டைக் கண்டித்து இடம்பெயர்ந்து வன்னியில் வாழும் மக்கள் நடத்திவரும் போராட்டம் 100 நாட்களைக் கடந்துள்ள போதும் சந்திரிகா அரசு இம் மக்களின் நியாயமான கோரிக்கையை நிராகரித்து மக்களின் போராட்டத்தை அவமதித்து வருகின்றது. ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தின் மல்லாவி அலுவலக முன்றலில் கூடி போராட்டம் நடத்தும் பொதுமக்கள் சிறீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்து நிவாரணம் பெற்றுத் தருமாறு விடுக்கும் வேண்டுகோளுக்கு



# வன்னியில் தொடரும் உண்ணாவிரதம்



முழுமையான வெற்றி கிடைக்கவில்லை என்பது குறித்து கவலைகொண்டுள் ளனர். எனினும் முழுமையான நிவாரணம் கிடைக்கும் வரை போராட்டம் தொடருமென உண்ணாவிரதம் இருக்கும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். வன்னியில் சந்திரிகா அரசின் நிவாரண வெட்டால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை பல பொதுமக்களின் மரணங்களுக்கு வழிவகைசெய்துள்ளது. பசி தாங்க முடியாமல் தற்கொலை செய்யும் சம்பவங்களும் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன. வன்னியில் இடம்பெறும் இவ் சாத்வீகப் போரை வெளியுலகிற்கு தெளிவாக எடுத்து விளக்கவேண்டிய பெரும் பொறுப்பில் புலம் பெயர் தமிழ் மக்கள் உள்ளனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தாத்தா வருவார்

கண்டி நகரம் விழாக்கோலம் பூண்டு விழித்திருந்தது. வீதி தோறும் வியப்பூட்டும் மின்விளக்குத் தோறணங்கள். பொலிசாரின் எச்சரிக்கைகளும் எடுபடாத நிலையில் சனசந்தடியால் பிரதான பாதைள் 'திமு திமு' என்றிருந்தன. எங்கோ எதுவோ, எப்படியோ நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் எல்லாவற்றையும் மறுத்துவிட்ட கோலத்தில் நிகழ்வுகள் நிகழ்ந்தன.

கண்டிப் 'பெரஹறா' நூறு யானைகளுக்கு மேல் ராஜநடை போட்டு தெருக்களில் பவனிவரும் புத்தபெருமானை வழிபட்டு மலர்தூவி வரவேற்க லட்சோபலட்டம் மக்கள் வழியில் காத்துக் கிடப்பார்கள்.

நான்கு தசாப்தங்களாக நாடாளுமன்ற சீமான், சீமாட்டிகள் விலை கொடுத்து வாங்கி மூட்டைகட்டி வைத்து விட்டுச் சென்ற ஆபத்துக்கள் இப்போ ஆங்காங்கே குமுறி வெடித்துக்கொண்டிருப்பதால் அவ்வாபத்துக்களை அலட்சியம் செய்துவிட்டு அலைபாயும் மக்களைப் பாதுகாக்க நாட்டின் முப்படைகளும் உசார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தன.

குப்புசாமி அவரது இரண்டு பிள்ளைகளும் அதிகாலையிலே ஆற்றில் நீராடிவிட்டு வந்துவிட்டனர். அவன் மனைவி சீலாவதியும் அன்று வெகு உற்சாகமாகவே வீட்டுப்பணிகளில் மூழ்கியிருந்தாள். அவள் நிறைமாதக் கற்பிணி ஆதலால் முதல்நாள் மாலையே தனது குடும்பத்தை அழைத்துச் சென்று அலங்காரத் தோரணங்களைக் கட்டிவிட்டு வந்திருந்தான். இதனால் இன்றைய சன நெரிசலுக்குள் அவர்களை அழைத்துச் செல்லும் உத்தேசம் அவனுக்கு இருக்கவில்லை. எனினும் தூய்மையான பூக்களை எடுத்துச் சென்று புத்தபெருமானின் புனித பாதத்தில் சமர்ப்பிப்பதற்காக தயாராகிக்கொண்டிருந்தான். அதற்காக சீலாவதி வெகு ஆர்வத்தோடு பூக்களைப் பறித்து கூடையிலிட்டிருந்தாள். அந்த வீடே நறுமணம் கமழ்ந்தது.

★★★

**சிறுகதை**

குப்புசாமியின் குடும்பம் இரண்டு மூன்று தலைமுறைகளாக கண்டியில் வாழ்ந்து வந்தது. அவன் தந்தை பெரியசாமி பேராதனை பூந்தோட்டத்தில் கூலி வேலை பார்த்து வந்தார். அப்போதெல்லாம் அந்தத் தோட்டத்தில் இந்தியத் தமிழர்கள் தான் அநேகமாக வேலை செய்தனர்.

கல்லும் முள்ளும் காடுமாகக் கிடந்த மலை நாட்டைச் சீர்திருத்தி செப்பமிட்டு வளங்கொழிக்கும் மண்ணாக்கி தோட்டத்துரைமாருக்கு அற்ப கூலிக்காக தாரைவார்த்த இந்தியத் தமிழர்களின் வழித்தோன்றல்கள். பின்னே சர்வமும் சிங்கள மயமாகி புறத்தே தள்ளிவைக்கப் ப[illegible]தில் வேலை செய்த தமிழ்த் தொழிலாளர் படிப்படியாகக் குறைக்கப்பட்டனர்.

இந்த சிங்களப் புரட்சியிலே வென்று தன் மைந்தனுக்கும் வேலை தேடிக்கொடுத்துவிட்டு மறைந்தார் பெரியசாமி. எனவே மைந்தன் இந்த வேலையில் நிலைத்து நிற்கின்றான் என்றால் அதற்கு இரண்டு காரணம். ஒன்று அவன் மணந்துகொண்டது ஒரு சிங்கள மாது. மற்றது அவன் பேச்சில் மூச்சில் நடைமுறையில் தென்பட்ட சிங்கள மயம்.

★★★

சீலாவதி அடிப்பெட்டியில் பக்குவமாக மடித்துவைத்திருந்த வெள்ளை பொலிஸ்ரர் சாரத்தையும், வெள்ளைச் சேட்டையும் எடுத்து கணவனிடம் கொடுத்தாள்.

"எதற்கு இந்த உடை? என்றான்.

அவள் சொன்னாள்

"ம்; கல்யாண உடை... மாப்பிள்ளைமாதிரி போகவேண்டும்"

அது அவள் ஆசை.

அவனும் மறுப்புத் தெரிவிக்காது அணிந்துகொண்டான்.

"நல்லாக இருக்கிறதா?" என்று கண்ணாடியைப் பார்த்தவாறு கேட்டான்.

அவனது மூத்த பையன் பதிலளித்தான்.

"ஹரிசோக் தாத்தா!" பையன் ஒருமுறை கைகளைத் தட்டிக் குதித்துக் கொண்டான்.

மனைவி மல்லிகைப்பூக்களைப் பொலித்தீன் பையிலிட்டுக் கொடுத்தாள். அத்தோடு ஐந்து ரூபாய்க் குத்தியையும் கொடுத்தாள்.

"இதை உண்டியலில் போடுங்கள்...

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நான் சுகமாக ஆசுபத்திரியிலிருந்து வரவேண்டும் என்று போடுங்கள்"

★★★

தலதா மாளிகையின் முன்னே சனம் கட்டுக் கடங்காமல் திணறியது. முப்படைகளும் சனங்களை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டிருந்தன.

புத்தபெருமானின் அன்புமயமான உருவச்சிலை பூக்குவியலிடையே எழுந்தருளியிருப்பது போலிருந்தது. பூக்களைச் சமர்ப்பிக்கும் பக்தகோடிகள் தம்முடன் எடுத்து வந்த பூக்களை அந்த கருணாவதாரத்தின் முன்பு வைத்துவிட்டு வணங்கிச் சென்றனர்.

குப்புசாமி நெரிசலூடாக நுழைந்தான். பூக்கள் கசங்கிவிடாது கரிசனையோடு சென்றான். அவன் உடல் யாரோ ஒரு கொழுத்த மனிதரின் உடலோடு சற்று அழுத்தமாகவே உரசியது.

"யாருடா அது!... அவர் சினந்து கொண்டு அவனைப் பார்த்தார்.

"என்னடா குப்புசாமி கண் தெரியவில்லையா!

குப்புசாமி....!

மறுகணமே பின்னால் நின்ற ஒரு முரட்டுப் பேர்வழியின் கரம் அவனது சேட்டைப் பற்றி பின்னே இழுத்தது.

"என்ன பெயர்?"

"குப்புசாமி"

"நீயேன் இங்குவந்தாய்!"

மறுவினாடியே அவன் கையிலிருந்த பூப்பையில் தன் கையை விட்டுத் துளாவினான் அந்தத் தடியன்.

பின்னர் பற்றிய பிடியை இறுக்கிக் கொண்டு சற்றுத் தொலைவில் இருந்த ஜீப்வண்டியை நோக்கி இழுத்துச் சென்றான். அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு அதிகாரி வியப்போடு அவன் முன்னே வந்து நின்றான். பின்னர் அவனது விபரத்தை விசாரித்தான். தூண்டிலில் போடுறவனுக்கு மீன் கிடைத்த திருப்தி. அவன் உறுமினான்.

அந்த அதிகாரி அவனை கழுத்தில் பிடித்து வண்டியினுள் தள்ளினான். அவர் சேட் பைக்குள் இருந்த ஐந்து ரூபாய்க் குத்தி அந்த முரடனின் பூட்ஸ் பாதணியில் விழுந்து தெறித்தது. ஜீப்வண்டி வேகமாகப் பறந்தது.

கூடி நின்றவர்கள் வண்டியைப் பார்த்துவிட்டு தமக்குள் மெல்லப் பேசிக்கொண்டனர்.

"ஒரு தமிழனை கைக்குண்டோடு



பிடித்துவிட்டார்கள்!..."

வண்டி பொலிஸ் ஸ்டேசனில் நின்றதும் அந்த அதிகாரி குப்புசாமியின் தலைமயிரைப் பற்றி பிடித்து கீழே இழுத்தான்.

"டேய் யாரடா உன்னை அனுப்பியது..." என்றான் கலங்கி நின்ற குப்புசாமி கண்கள் கலங்க ஈனஸ்வரத்தில் பேசினான்.

"யாரும் இல்லை சார் பூக்காணிக்கை பண்ணுவதற்காக வந்தேன்."

"அடே நாயே! தமிழன் ஏன்டா புத்த ஆமதுறுவுக்குப் பூப்போடுவது?

அவன் வயிற்றில் எட்டி உதைத்தான்.

குப்புசாமி பின்புறமாக இடறி விழுந்தான். வயிற்றில் என்னவோ செய்தது. வாயிலே வழிந்த இரத்தத்தை துடைத்துவிட்டு எழ மற்றொருவன் அவன் கழுத்தை பிடித்துத் தள்ளி இரும்புக்கூட்டுக்குள் அடைத்தான். அத்தோடு தானும் அதற்குள் நின்னு கொண்டான்.

"டேய் நீ ஒரு புலி!... ஓம் சொல்லுடா..." இது அடுத்தவனின் விசாரணை. கூடவே இடி.

குப்புசாமியால் எதையுமே பேச முடியவில்லை. அவர் தலைசுற்றியது. அந்தப் பொலிஸ்காரன் கையோயும் வரை அவனை அடித்தான். காலால் உதைத்தான்.

குப்புசாமி உடல் நடுங்க மயக்கமுற்றுச்சாய்ந்தான்.

பொழுது மங்கிய பின்னரும் அவர் எழவில்லை. நடுநிசி பொலிஸ் ஸ்டேசன் அமைதியில் கிடந்தது. அந்த இரும்புக் கூடு இருள் மண்டிக் கிடந்தது. ஆழ்ந்த துயிலில் அமிழ்ந்து போன குப்பனின் கண் எதிரே ஒரு ஒளி பிரவாகம். மெல்லக் கண்களைத் திறக்கின்றான். ஆம்! உண்மைதான் அவரே தான். அவன் கண்களைத் துடைத்துவிட்டுக் கொண்டு பார்க்கிறான். ஆமாம் அந்தப் புத்தபிரானின் புனிதத் தோற்றம்.... அமைதியில் ஆழ்ந்த அன்பு வதனம்!... மூடியவிழிகள் மெதுவாகத் திறக்கின்றன. அன்பும் ஜீவகாருண்யமும் கலந்த பார்வை. கவலையில் ஆழ்ந்த ஆதரங்கள் மெல்ல அசைகின்றன.

"மைந்தா உனக்காக நான் வருந்துகிறேன். இந்த புனித நாளில் என்னைத் தரிசிக்க ஓடோடி வந்தவன் நீ... ஆனால் மகனே!... நீ எதிர்பார்த்தது போல் நான் அங்கு இல்லை... நான் பலவருடங்களுக்கு முன்னரே இந்நாட்டைவிட்டு விடைபெற்றுவிட்டேன். நான் குடிபுகுந்த

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இல்லங்கள் யாவும் இன்று கொலை ஞர்களின் குகைகளாகிவிட்டன. எனது சிலைகள் யாவும் பஞ்சமா பாதகத்தின் பிரச்சாரச் சின்னங்களா கிவிட்டன. நானோ அரசைத் திறந்துவிட்ட துறவி எனது மதத்திற்கு அரச அதிகாரம் வேண்டியதில்லை. அதனை நிலைநிறுத்தத் துப்பாக்கி கள் தேவையில்லை. கொலைப்பாத கமற்ற நாடே எனது குடியிருப்பு! போர் வெறி கொண்டவர்கள் தம் வேர்களை தாமே அகழ்ந்தெடுக்கின் றனர்.

குப்புசாமி எழுந்து உட்கார்ந்து கரங்குவிக்கின்றான். மீண்டும் ஆதரங்களின் அசைவு.

"நான் உன் போன்ற தூய நெஞ்சங்களில் வாழ்கிறேன்!... புனிதமான நெஞ்சங்களே என் குடியிருப்பு!"

அந்த தெய்வீக ஒளி மெல்ல மறைகிறது. மீண்டும் இருட் சூன்யம்.

★★★

குப்புசாமி கைது செய்யப்பட்டதை அறிந்த சிலாவதி துடித்துப் போனாள். பொலிஸ் பணியகம் இராணுவ முகாம் என்று எங்கெல்லாமோ அலைந்தாள். எங்கும் இல்லை என்ற வார்த்தை அவள் முகத்தில் உமிழ்வது போலிருந்தது. அவள் அமைதியாக அழுதாள். குழந்தைகளும் அந்த சோகத்தில் கலைந்தன. உற்றார் சுற்றார் விசாரித்தபோது அவனது மகனே பதிலுரைத்தான்.

"தாத்தா வருவார்"

அந்த நம்பிக்கையில் நாட்கள் கரைகின்றன. அவர்களில் கடைசிச் சிறுமி சொன்னாள்.

"அம்மா.... தாத்தா வந்தால் வெசாக் பார்க்கப் போகலாம் என்ன?"

"வேண்டாம் மகள் அங்கே கொலைகாரக் கூட்டம் நிற்கிறது!.... நமக்கு வேண்டாம்.

முற்றும்

# இன்னுமா தயக்கம்

வருகின்ற எதிரியை வழிமறித்தழித்திட வீர
வெறிகொண்டெழு தமிழனே
வெற்றி எமக்கென்று சொல் தீரனே
குருதி வடிந்த
கோரப்பற்களுடன் - எதிரி
உன் வீடு தேடி வருகிறான்
இன்னுமா ஓடுகிறாய்
ஏன் ஒழிக்கின்றாய் நில் நில்
சற்றுத் திரும்பிப் பார்
சண்டியன் ஜெயசிக்குறுய்
தாண்டிக் குளத்தில் தரை வழி
பாதை திறக்க வந்த
சிங்களத்து சிரமறுத்த வீர
கரிகாலன் படையில் சேர
இன்னுமா தயக்கம்
ஏனிந்த தயக்கம்
சிந்தித்தது போதும் சீக்கிரம்
செயல்படு தமிழனே
படையில் சேர்ந்து
பகைவனை அழிக்க
பயந்தது போதும் தமிழனே
பாயும் புலியென மாறிடு தமிழனே
பெரும் புயலென வீசிடு வீரனே
படுகின்ற சமரினில் நீ
பலியாகிப் போனாலும் - வீரப்
புலியென புகழ் பெறுவாய் தமிழனே
போர்க்களம் புறப்படு தமிழனே
போறொன்று வந்திட்டால் - தமிழன்
புறங்காட்டி ஓடியதாக வரலாறில்லை
தமிழன் என்று தலை நிமிர்த்தி கூறி
புயலென மாறி வீரப்படை கொண்ட
புலியினில் சேர்ந்திடு

வெள்ளம் வந்த பின்பு
அணை கட்டி என்ன பயன்
விரைந்து வா
வீட்டினுள் படுத்தது போதும்
விழித்துப்பார் தேசம் விடிகிறது
விரைந்து வா வீரத்துடன் வா
நீ
வீரத்தாய் ஈன்ற வெற்றிமகன்
ஈழத்தாய் பெற்ற வீரப்புதல்வன்
நல்ல நேரம் இதுதான்
கடைசிக் காலம் இதுதான் வா ஓடி வா
தலைவன் இருக்கின்ற காலத்தில்
விரைவில் தமிழீழம் காண்போம்
ஒன்று மட்டும் சொல்கிறேன்
இது ஈழத்தின் இறுதி அழைப்பு
நமது தேசத்தின் கடைசிக் காலம்
காலத்தை வீணாக்காமல்
களத்தினுள் குதித்திடு தமிழனே - நீ
சாதாரணமான மகன் அல்ல
சரித்திர மகன்
இன்று நீ
பள்ளி அறையில் சந்தித்தாய்
நாளை
பாசறையில் சந்திப்பாய்
இது உண்மை தமிழா

- செ.ளீ.கனிச்செல்வன்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# பகையழிக்கப் புறப்படுவோம்



இடியெனக் கேட்டது
வெடிமுழக்கம்
தாயின் மடியில் துடிதுடித்து
மடிந்துபோனது குழந்தை
குழந்தையை மட்டுமா
முடித்தார்கள் - இல்லை
என் குலத்தையும் அல்லவா
அழிக்க நினைக்கிறார்கள்
வெள்ளையுடன்
பள்ளிக்குப்போனவரும்
நள்ளிரவில்
பள்ளிகொண்டவரும்
நெஞ்சில் ஈரமில்லா நயவஞ்சகரால்
மாயமாய் மறைந்து போவார் - சிலர்பின்
புதைகுழியிலிருந்து சிதைந்த நிலையில்
எஞ்சியோர் காணாமல் போனோர்
பட்டியலில்

அஞ்சும் ஒன்றும் மணிக்குப் பின்
தஞ்சமடைவார் வீட்டினுள்ளே
நாதியற்ற பகைவனிடம் நீதியெங்கே
சீரோடு வாழ்ந்த வாழ்வை
வேரோடு தொலைத்துவிட்டோம்
சிங்களக் குழந்தைக்கு தம்மதீபக்
கோட்பாட்டை தளரிலிருந்து பௌத்தம்
ஊட்டி வளர்க்கின்றது
இன அழிப்புத் தொடர்கின்றது.
பகையழிக்கப் புறப்பட்ட புலிவீரர் - போர்
என்றால் என்னவென்று புரிய வைக்கின்றார்

பெருந் தலைவர்
விடைகொடுக்க
பகைமுடிக்கின்றார்

வகை வகையாய் ஆயுதங்கள்
இருந்தபோதும்
அதைத் தாங்கும் கரங்கள்
பெருந்
தொகையாய் இல்லாததனால்
தேங்கி கிடக்கின்றான்
நெடுஞ்சாலையைக் கைப்பற்ற
நெடுநாளாய் முயற்சிக்கின்றான்
தடிபிடித்தவரின் கதைகேட்டு - இன்று
படுகுழியில் பாதகர்கள்
படையினரின் கதை முடிக்க - நாம்
புலிப்படையில் இணைந்துகொண்டால்
பகைவனுக்கிங்கேயே புதைகுழி
ஊருக்குப் போவதென்றால்
நேருக்கு நேர்மோதவேண்டும்

யார் எமக்காக போராடுவார்
சமர்புரிய வேண்டியவர் நாம் தானே
கயவனின் உயிர் பறிக்க - கரம்
கொடுத்து உதவிடுவோம்
பகையழிக்கப் புறப்படுவோம்
பாசத்தை ஒதுக்கிடுவோம்
தாயகத்தை நேசிப்போம் - தமிழ்
தேசத்தை மீட்டிடுவோம்

**செந்தமிழ்ச்செல்வன்**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



New Doc 2020-01-25 11.24.59_page-0043.jpg




New Doc 2020-01-25 11.24.59_page-0044.jpg